# நம் வழி வேளாண்மை

பருவம் 10 ஜூலை – செப்டம்பர் 2001 இதழ் 2




*இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்*
*மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம்வழி வேளாண்மை

பருவம் 10 ஜுலை – செப்டம்பர் 2001 இதழ் 2

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

**நம் வழி வேளாண்மை தத்துவம்**

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பல்லி ஸ்ருஜானா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான் சம்சாரிகட்டே |

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
(போன்) 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta, Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

**நம் வழி வேளாண்மை கூட்டமைப்பின் பிறமொழி இதழ்களின் முகவரி**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
C/o. Prof. Anil K. Gupta
Indian Institute of management
Vastrapur
Ahmedabad - 380 015

குஜராத்தி – லோக் சர்வானி
SRISTI
P.O. Box 15050
Ambawadi Post
Ahmedabad - 380 015

தெலுங்கு – தேனெட்டிகா
Prof. (Mrs) Geervani
201 / Dream Apartment
Road No: 3, Banjara Hills
Hyderabad - 500 034
Andhra Pradesh

ஹிந்தி – சூஜ் புஜ்
Dr. Sudhirendra Sharma
Energy & environment Group
7 Triveni , A6paschim Vihar
New Delhi - 110 063

கன்னடம் – ஹித்தலகிடா
Dr. T.N. Prakash
Department of Agri Economics
University of Agri. Sciences
GKVK Campus , Bangalore - 560 024
Karnataka

பகாரி – மாக்கீர்
Dr. A. Chandan
Post Box : No: 6 , Chamba
Himachal Pradesh - 176 310

ஸ்பானிஸ் – அபேஜா
Mario Mejia Gutierrez
Carrera 43 No. 10-50
Apto 502.
Telefono : 336 8531

Cali , Valle , Colombia

## அடிமட்ட கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை

சென்ற ஆண்டு தேசிய அளவில் நடைபெற்ற முதலாவது அடிமட்ட கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரும் போட்டியின் மூலம் 1600 கண்டுபிடிப்புகள் மற்றும் சிறந்த விளங்கும் பாரம்பரிய உத்திகள் நமக்கு வந்து சேர்ந்தன. இவை அனைத்தும் 24 மாநிலங்களிலிருந்து வந்து சேர்ந்தவையாகும். இதன் மூலம் நமது நம் வழி வேளாண்மைக் குழுமமானது இதுகாறும் சமூகத்தில் தடைப்பட்டிருந்த அல்லது மூடப்பட்டிருந்த ஆக்கப் பூர்வமான அறிவு ஆற்றலை திறந்து விட்டது.

நமது பரந்துபட்ட தேசத்தில் 1600 உத்திகளின் எண்ணிக்கையானது மிக மிக சொற்பமே இதைப்போன்று பத்து மடங்கு அல்லது ஆயிரம் மடங்காக உயர்ந்தால் தான் நமது சமூகத்தில் விழிப்புணர்ச்சியையும் அதன் மூலம் மாற்றத்தையும் உருவாக்க முடியும்.

இந்த கண்டுபிடிப்புகளை உருவாக்கியவர்களுக்கு விண்ணப்ப உறுதிப் படிவம் அனுப்பி வைக்கப்பட்டது. இதன் மூலம் தங்கள் கண்டுபிடிப்புகளை அல்லது சிறந்து விளங்கும் பாரம்பரிய அறிவை தேசிய கண்டுபிடிப்பு ரிஜிஸ்தரில் பதியப்படும் சமயம் இந்த அறிவை பிறருக்கு தெரியப்படுத்துவதில் மூன்று வீதி முறைகள் கொடுக்கப்பட்டன. 1) முதலாவது இதை யாரும் தங்கு தடையின்றி பகிர்ந்து கொள்ளலாம். 2)இரண்டாவது இந்த அறிவை வணிக மயமாக்கும் முயற்சியில் மட்டும் தான் பகிர்ந்து கொள்ளலாம். 3) மூன்றாவது இந்த உத்தியை லாப ரீதியில் பகிர்வு செய்து கொள்ளலாம். இந்த மூன்று விதிகளில் ஏதாவது ஒன்றுக்கு ஒப்புதல் அளித்து ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்த ஒப்புதல் அளிப்பதால் இந்த அறிவை கண்டுபிடிப்பாளர்கள் தவிர வேறு எந்த நிறுவனமும் சொந்தம் கொண்டாட முடியாது.

பெரும்பாலான கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் அறிவை நிபந்தனையில்லாமல் பிறருக்கு தெரியப்படுத்தலாம். என்று ஒப்புதல் அளித்து இருந்தனர். அதேசமயம் சற்று பெரும்பாலான அளவிலான கண்டுபிடிப்பாளர்கள் நிபந்தனையுடன் கூடிய விதிமுறைக்கு ஒப்புதல் கொடுத்து இருந்தனர். எனவே இதற்கிடையில் இவைகளை ஆராய்ச்சி மற்றும் சோதனை செய்ய கூடுதலான காலம் தேவைப்படும்.

சோதனை செய்த பின் சிறந்த கண்டுபிடிப்பாளர்களுக்கு சன்மானம் வழங்கி பகிர்வு செய்யலாம் எனில் அது வரைக்கும் அறிவு பகிர்வு ஏற்படாது முன்னேற்றம் தடைபடும். எனவே நம் வழி வேளாண்மைக் குழுமம் தொகுத்துள்ள ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகளையும் உத்திகளையும் சமுதாயத்தில் மக்கள் மத்தியிலேயே பயன்படுமாறு செய்வதற்கு நம்மிடையே குறுகிய காலத்தில் செலவில்லாமல் பதிவுரிமை செய்யப்படும் வழிமுறை இன்னும் உருவாக்கப்படவில்லை இது செய்யப்படும் சமயம் நமது அனைத்து கண்டுபிடிப்புகளையும் கணிணியில் இணைய தளத்தில் ஒலியும் ஒளியும் நிகழ்ச்சியாக கொண்டு வந்தால் பரந்துபட்ட பூவுலகிற்கு அனைத்து இடங்களிலும் காணும் வாய்ப்புண்டு. இதற்கெல்லாம் உலகளவில் எளிமையாக்கப்பட்ட பதிவுரிமை பெறும் முறை ஒன்று உருவாக்கும் ஏற்பாடு நடைபெற வேண்டும். இதுவே அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களின் காப்புரிமையை நிலைப்படுத்தும். உயிரணு பதிவையும் (Biopiracy) புறக்கணிக்கும்.

## அடிமட்ட கண்டுபிடிப்புகளை (அடைகாத்து) பொரிக்க வைத்து தரம் கூடுதல்

அடிமட்ட கண்டுபிடிப்புகளை சோதித்து நெறிப்படுத்தினால் பலன் தரும் விற்பனை பொருளாக மாற்ற முடியும். இதனை செயல்படுத்த தனி நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் தேவை . இது போன்ற நிறுவனங்களை அதாவது இந்தியாவின் நான்கு மூலைகளிலும் நிறுவனங்களை நான்கு அடிமட்ட கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் கம்பெனிகளை உருவாக்க தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையானது முயற்சி எடுத்து வருகின்றது. இதற்கு மாநில அரசு, தனியார் கம்பெனி அல்லது தொண்டு நிறுவனங்கள் முன் வந்து குறைந்தது ரூபாய் 2 கோடி டெபாசிட்டை நிறுவனத்தின் பெயரில் வைப்புத் தொகையில் செலுத்த முன்வர வேண்டும். இவ்வாறு செய்தால் முதல் 3 வருடங்களுக்கு இப்புது நிறுவனங்களின் நிர்வாகச் செலவை தேசிய அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் அறக்கட்டளை ஏற்றுக்

கொள்ளும்.

**அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவப்படுத்துதல்**

தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் தலைவராக உள்ள டாக்டர் மசேல்கர் தற்சமயம் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதி மாநில அளவில் கண்டுபிடிப்பாளர்களை சுதந்திர தினம் அல்லது குடியரசு தினங்களில் விருது அளித்து கௌரவிக்கச் செய்ய வேண்டும். எனக் கேட்டுக் கொண்டுள்ளார். தமிழகத்தில் நமது முதலமைச்சர் இதற்கு முன்னுதாரணமாகத் திகழ்வார்கள் என நம்புகிறோம்.

**சிறுகடன் உதவி**

உலகம் முழுவதும் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு சிறுகடன் வசதி நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்நாள் வரை அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களுக்கு கண்டுபிடிப்பை மேம்படுத்த சிறு கடன் வசதி (Microventure Capital Fund ) ஏற்பாடுகள் வரவில்லை. இருப்பினும் இனி வரும் காலத்தில் இதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும் என நம்புகிறோம்.

**அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்**

பெரும்பாலான கண்டுபிடிப்பாளர்கள் தங்களது அனுபவ அறிவையும் கண்டுபிடிப்புகளையும் தாராளமாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த பெருந்தன்மை உள்ளம் படைத்தவர்கள் பொருளாதார ரீதியில் ஏழைகளாக கஷ்டப்படுவது வருந்தத்தக்கதாக உள்ளது. வணிக ரீதியில் செயல்படும் தனிப்பட்ட நபர்கள் மட்டும் செல்வந்தர்களாக உள்ளனர். எனவே நமது சமூகமானது நல்ல அறிவுத் திறமையை கொண்டுள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பொருளாதார உத்திரவாதத்தை ஏன் ஏற்படுத்தக் கூடாது?

பேராசிரியர் அனில் குப்தா
உதவி தலைவர்
தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை
அகமதாபாத்
தமிழில் : விவேகானந்தன்

## குஜராத் மாநில உத்திகள்

குஜராத் மாநிலத்தில் குஜராத்தி மொழியில் வெளியிடப்படும் நம் வழி வேளாண்மை (லோக்சர்வானி) பதிப்பில் தொகுக்கப்பட்ட உத்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

## பருத்தியில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த

குஜராத்தின் வடக்குப் பகுதியில் வீரிய நெட்டை ரக பருத்தியில் வெள்ளை ஈ அதிகளவில் தாக்குதலை ஏற்படுத்தி சேதாரத்தை உண்டாக்குகின்றது. கடையில் விற்கப்படும் பூச்சி மருந்தை தெளித்துப் பார்த்ததில் இது வரை நல்ல பலன் கிட்டவில்லை. 1985 லிருந்து 1990 வரை விவசாயிகளுக்கு நட்டத்தையே ஏற்படுத்தி வந்தது. இதனால் பருத்தி பயிரிடப்படும் நில விஸ்தீரணம் குறைய ஆரம்பித்தது. பருத்திப் பயிரை சாகுபடி செய்யும் விவசாயிகள் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்தது. இந்தத் தருணத்தில் ''மோடசா'' என்ற கிராமத்தில் கிராம சேவைக்காகப் பணியாற்றி வரும் ரஜினி காந்த் படேல் என்பவர் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என நினைத்தார். மலைகளில் காடுகளில் பரவியுள்ள முட்களைக் கொண்ட புதராக வளர்ந்து வரும் உன்னிச் செடியை கவனித்துப் பார்த்தார். இது முட்களுடன் ஆரஞ்சு நிறத்தில் பூப்பூக்கும் செடியாகும். இதற்கு ஆங்கிலத்தில் லண்டானா (Lantana ) என்று அழைப்பர். இந்த செடி ஆடு மாடுகள் கூட சாப்பிடாத விஷத்தன்மை கொண்டது. இந்தச் செடியிலிருந்து 3 கிலோ அளவு இலைகளை எடுத்து 20 லிட்டர் நீர் கொண்ட பாத்திரத்தில் இட்டு 3 முதல் 4 மணி நேரம் நீர்வற்றி 5 லிட்டர் அளவாக குறையும் வரை காய்ச்ச வேண்டும்.

இந்தக் கசாயத்தை 75 – 80 மி.லி அளவு எடுத்து 15 லிட்டர் நீரில் கலந்து ஸ்பிரேயர் வைத்து தெளிக்க வேண்டும். கசாயத்தின் அளவு 80 மி.லி அளவைத் தாண்டிவிட்டால் பருத்தியிலுள்ள பூக்கள் மற்றும் காய்கள் காய்ந்து கருகி விடும். தகுந்த கசாயத்தை 3 வருடங்களாக பயிருக்குத் தெளித்து பார்த்து சோதனை செய்து பார்த்த ரஜினகாந்த் படேல் இவ்வாறு கூறுகிறார்.

உன்னிச் செடி கசாயம் வெள்ளை ஈக்கள் பருத்தியில் சாறு உறிஞ்சுவதைத் தடுத்து விரட்டுகிறது. சென்ற வருடம் குஜராத் மாநிலத்தில் அனில்குப்தா அவர்கள்

பாத யாத்திரை மேற்கொண்ட போது பாத்பூர் கிராமத்தில் இந்த உத்தியை கையாண்ட விவசாயிகள் இதன் பலனை உறுதி செய்தனர்.

(நெதர்லாந்து நாட்டில் ''நட்காட்'' என்ற பூச்சி விரட்டி மருந்து உபயோகத்தில் உள்ளது. இந்த இயற்கை மருந்தானது செதில் பூச்சிகள் , சிலந்தி , தத்துப்பூச்சிகள் , வெள்ளை ஈ மாவுப் பூச்சிகள் போன்றவற்றை சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது. இதில் அடங்கியுள்ள பொருட்கள் : புங்கம், வேம்பு , புதினா , உன்னிச் செடி , குப்பைமேனி , தரகுப்புல் என்ற லெமன்கிராஸ் மற்றும் சோப்புக் கட்டிக் காயாகும்

(தேனீ – 12206)

## புரடீனியா , ஹீலியோ தீஸ் புழுக்களைக் கட்டுப்படுத்த

பணப்பயிர்களான ஆமணக்கு, பருத்தி , புகையிலை போன்ற பயிர்களை புரடீனியா எனச் சொல்லப்படும் வரிப்புழுக்கள் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. பயறு வகைச் செடிகள் , துவரை போன்றவற்றில் பச்சை நிறத்தில் காணப்படும் ஹீலியோதீஸ் எனப்படும் புழுக்கள் சேதம் விளைவிக்கின்றன. கிராம சேவைக்காகப் பணியாற்றும் ரஜினிகாந்த் படேல் இதற்கும் நிவாரணம் கண்டுபிடித்து இருக்கிறார். இவரது முறைப்படி 4 கிலோ சோற்றுக்கற்றாழை , 500 மி.லி வேப்பெண்ணெய் 500 கிராம் புகையிலைத் தூள் போன்றவற்றை 5 லிட்டராக வற்றும் வரை சுமார் 3–4 மணிநேரம் வரை கொதிக்கவிட வேண்டும். இதற்கு பின் 50 கிராம் சோப்புக் கட்டி விதைத் தோடு தூள் சேர்க்க வேண்டும். இந்த கரைசலிலிருந்து 100 முதல் 150 மி.லி வரை எடுத்து ஸ்பிரேயர் டேங்கில் 15 லிட்டர் நீரில் கரைத்து கிராமத்தில் உள்ள நிரன்ஜன்பாய் என்பவர் தனது நிலத்தில் தெளித்துப் பார்த்தார். இதன்படி 80 முதல் 90 சதவீதம் புழுக்கள் கட்டுப்பட்டதாகக் கூறுகிறார்.

ரஜினிகாந்த் படேல்
67 , ஜீவன்ஜோத் சொசைட்டி
மெகுராஜ்ரோடு , மொடசா தாலுகா
சபர்கந்தா மாவட்டம் . (தேனீ – 12207)

### திராட்சையில் அதிக பழங்கள் பிடிக்க

குஜராத்தில் சபர்கந்தா மாவட்டத்தில் ஜனக்பூர் கிராமத்திலுள்ள பாபுபாய் ஜோதிபாய் படேல் என்பவர் திராட்சையில் இயற்கை வேளாண்மையை கடைபிடித்து வருகிறார். இவரது முறைப்படி புளித்த மோர் 1 லிட்டர் வேப்பஞ்சாறு 50 மி.லி பசுமாட்டு கோமியம் 1 லிட்டர் இவற்றை கலந்து 10 நாளைக்கு ஒரு தடவை தெளிக்கிறார். இதனால் திராட்சைக் கொடி பூச்சி , நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியை கொடுப்பதுடன் நல்ல விளைச்சலையும் கொடுப்பதாகக் கூறுகிறார்.

(தேனீ – 12208)

## மரக்கன்றுகளின் வளர்ச்சியைக் கூட்ட இலுப்பைப் பூ

மரக்கன்றுகளை நட்ட பின் எவ்வளவு நன்றாக கவனித்து பராமரித்து வந்தாலும் சில சமயம் நல்ல வளர்ச்சி கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகளுக்கு பொருளாதார நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. குஜராத் மாநிலத்தில் பனஸ்கந்தா மாவட்டத்திலுள்ள வீராம்பூர் கிராமத்திலுள்ள கரிம்பாய் என்பவர் ஒரு சோதனை செய்து பார்த்தார். பக்கத்திலுள்ள மலங்காட்டில் உள்ள இலுப்பை மர பூக்களை (பிப்ரவரி – மார்ச் மாதத்தில் பூக்கும்) கொண்டு வந்து கைப்பிடி அளவு பூக்களை 1 வாளியில் 3–4 மணி நேரம் ஊற வைத்தார். பின்னர் இதை வடிகட்டி கிடைத்த சாற்றை வாரம் ஒரு முறை தெளித்து வந்ததில் மரக்கன்றுகளுக்கு நல்ல வளர்ச்சி கிடைத்தது. வேப்பமரக்கன்று ஒரு வருட காலத்தில் 10 அடி உயரத்தை தாண்டியதாகக் கூறப்படுகிறது.

(தேனீ – 12209)

### சீரகத்தில் கருகல் நோய்க்கு

குஜராத்தில் வறட்சிப் பகுதியிலும் குறைந்தளவு கிணற்று நீர் கொண்டு பாசனம் செய்யப்படும் பகுதியிலும் சீரகம் சாகுபடி செய்யப்படுகிறது. இது ஒரு சிறந்த பணப் பயிராக விளங்குகிறது. சீரகத்தை தாக்கும் முக்கிய நோய் கருகல் நோயாகும். இந்த நோய்க்கு இயற்கை வழியில் சுரேந்தர நகர் மாவட்டத்திலுள்ள தோராளி கிராமத்தில் வசித்து வரும் பத்துபாய் கந்துபாய் ரத்தோட் ஒரு முறையைக் கையாண்டு நல்ல பலனை கண்டுள்ளார். இதன்படி சோற்றுக் கற்றாழை , வேப்ப இலை , எருக்களை போன்றவற்றை சமபங்கு இடித்து அரை லிட்டர் சாறு எடுக்க வேண்டும். இத்துடன் 5 கிராம் சர்ப் வாஷிங் பவுடர் சேர்த்து நன்றாகக் கலக்கி 15 லிட்டர் நீர் சேர்த்து தெளிக்க வேண்டும். இந்த முறையை கடந்த 5 ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வருகிறார். இந்த மருந்தை 8–10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். இந்த முறையை இவ்வூரிலுள்ள மற்ற

விவசாயிகளும் கடைபிடித்து நல்ல பலனைப் பெற்று வருகின்றனர்.

(தேனீ – 12210)

**எலுமிச்சைக்கு இயற்கை உரம்**

பெரம்பலூர் மாவட்டம் டி . களத்தூர் கிராமத்தில் திரு. நடராஜன் குடும்பத்தில் கடந்த 22 ஆண்டுகளாக பாரம்பரியமாக எலுமிச்சை சாகுபடி செய்து வருகிறார்கள். எலுமிச்சைக்கு ஆறுமாதத்திற்கு ஒரு முறை உரம் வைக்கிறார். முதல் தடவையாக ஆவணியிலும் இரண்டாவது முறை தை மாத்திலும் தருகிறார். ஒவ்வொரு முறையும் 4–6 தட்டு எருவும் இத்துடன் கொட்டை பிண்ணாக்கு 6 கிலோ மற்றும் கடலை பிண்ணாக்கு 2 கிலோ அளவு கலந்து 6 வருட மரம் ஒன்றுக்கு தருகிறார். பின்னர் 2 ஆண்டுகளுக்கு 1 முறை மயில் துத்தம் மற்றும் சுண்ணாம்பு கலந்து கலவை தயார் செய்து தெளிக்கிறார். இயற்கையில் விளைந்த எலுமிச்சம் பழம் மண்ணில் விழுந்து இருந்தாலும் அழுகாது. 5 நாள் வரை வாடாமல் இருக்கும்.

விவசாயி முகவரி
ஆர். நடராஜன்
த/பெ. ரெங்கராஜன்
4/8 , பிள்ளையார் கோயில் தெரு
டி, களத்தூர்
குன்னம் தாலுகா , பெரம்பலூர் மாவட்டம்

## வெம்பூர் இன செம்மறி ஆடு

தூத்துக்குடி மாவட்டத்தில் புதூர் பகுதியில் வெம்பூர் மற்றும் சுற்றியுள்ள 16 கிராமங்களில் இந்த செம்மறி ஆடு காணப்படுகிறது. இந்த ஆடு விரைவில் சதைபிடித்து உடல் எடை கூடும். குட்டி பிறந்த 30 நாட்களில் 3 கிலோ எடை வரும் . 3 மாதத்தில் 8 கிலோவும் , 10 மாதத்தல் 12 கிலோ வரையும் வரும். முதிர்ந்த கிடா 50 கிலோ எடையும், செம்மறியாடு 45 கிலோ எடையும் கொடுக்கும். இந்த ஆடு செங்கல் கலரில் பொட்டுகள் வைத்தது போன்று இருக்கும். கொம்பு திருக கொம்பு ; உயரம் 3 அடி ; 4 அடி நீளம் இருக்கும். இப்பகுதியில் சுமார் 2000 வெம்பூர் இன ஆடுகள் காணப்படுகின்றன. இதனை வாங்கி பயன்பெற விரும்புவோர் அணுக வேண்டிய முகவரி

திரு. சண்முகையா
ஆடுவளர்ப்போர் சங்கத் தலைவர்
வெம்பூர் , புதூர் வழி , எட்டயாபுரம் தாலுகா
தூத்துக்குடி மாவட்டம் – 628 905

## நம் வழி வேளாண்மை வழியில் தேரீர்

தொகையறு
மண்ணில் முளைத்தெல்லாம்
மருந்தென பொருளாகும்
மனிதன் அறிந்தவற்றை
மறைப்பது நியாயமுண்டோ
மறைக்காதே மறைக்காதே மருந்தை – அது
மனித நேயமாகாது உணர்ந்தே
அறிந்தவற்றை வெளிபடுத்து
விரைந்தே – நம்மை
அகிலத்தோர் போற்றிட வியந்தே
(மறைக்காதே)
பாட்டி அம்மா நமக்கு கொடுத்த மருந்தே
பலன் பெற்று உயிர் வாழ்ந்தோம்
வளர்ந்தே பச்சிலையும் கைபாகமும்
இணைந்தே பாரறிய செய்திடு
இன்றே விரைந்தே
(மறைக்காதே)

பலியாது என்று சொல்லைத் துறந்தே
பலன் அளிக்க செய்திடு கனிந்தே
பாரம்பரிய வழியாக தொடர்ந்தே
பச்சிலைகள் பயன் மிகுந்து துணிந்தே
(மறைக்காதே)

தனக்காக வாழ்வது தத்துவமில்லை
தாயின் அன்பு இல்லா விட்டால்
பாசமும் இல்லை
தானறிந்த செயல்பாடுகள் ஊருக்குதவிட
தளிர்ந்து விரிந்து என்றும் தக்க வைத்திட
(மறைக்காதே)

உயிர் காக்க உதவும் இந்த மருந்து
உன்னோடு அழியலாமா இணைந்து
நல்லோரோடு வெளிப்படுத்த வா நீ
நம் வழி வேளாண்மை வழியில் தேரீர்

ம.அ. சின்னதம்பி
சித்த மற்றும் ஹோமியோபதி மருத்துவர்
அலங்கம்பட்டி
கம்பூர் அஞ்சல் , மேலூர் வட்டம்
மதுரை மாவட்டம் – 625 101

## சல்லி கோடாங்கிபட்டி திரு. பெரிய அய்யாவுவின் கால்நடை மூலிகை வைத்தியம்



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டாரம் , சல்லிகோடாங்கி பட்டி கிராமத்தில் பெரிய அய்யாவு (55) வசித்து வருகின்றார். 25 ஆண்டுகளாக கால்நடை மூலிகை வைத்தியம் இலவசமாக செய்து வருகின்றார். இவருடைய அப்பா திரு. பனையன் ஒரு கால்நடை வைத்தியர். இதுவரை 30 கிராமங்களின் 3000 மாடுகளுக்கு வைத்தியம் செய்துள்ளார்.

**இரத்தக் கொதிப்புக்கு**

மாடு தண்ணீர் குடிக்காது. உடம்பு வற்றிவிடும். இந்த நோயை குணப்படுத்த அத்திப்பட்டை 1/2 கி.கி சீரகம் 100 கிராம் மற்றும் சிறுவெங்காயம் 100 கிராம் உரலில் இடித்து நீராகாரத்துடன் கலந்து 1 நாளைக்கு காலை மாலை என இரு வேளை கொடுத்தால் இரத்தக் கொதிப்பு சரியாகி விடும்.

**வயிற்றுப் பொருமலுக்கு**

வயிறு ஊதியிருக்கும். தண்ணீர் குடிக்காமல் சோர்வாக இருக்கும். சுக்கு 50 கிராம், கஸ்தூரி மஞ்சள் 50 கிராம், சீரகம் 50 கிராம், ஈஸ்வர மூலிகை இலை 100 கிராம் மற்றும் சர்க்கரை கொல்லி இலை (சிறுகுறுஞ்சான் , சீனி கொல்லி) உரலில் இடித்து உருண்டையாக்கி காலை மாலை இரு வேளை சம அளவில் கொடுத்தால் குணமாகிவிடும். தொட்டியில் தண்ணீர் குடிக்க விடக்கூடாது. சுடு தண்ணீரை ஆற வைத்து கொடுக்க வேண்டும்.

**சாதாரண கழிச்சலுக்கு**

தீவனம் தின்னும் மாடு நன்றாக இருப்பது போல் தோன்றும். அடிக்கடி கழிச்சல் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். கழிச்சலை குணப்படுத்த கல்லத்திக்காய் 1 படி , சீரகம் 50 கிராம் மற்றும் வெங்காயம் 100 கிராம் இடித்து நீராகாரம் 1 படி சேர்த்து காலை மாலை இரண்டு வேளை கொடுத்தால் 2 நாளில் குணமாகிவிடும்.

**குந்து நோய்க்கு**

உடம்பு புல்லரித்து காணப்படும். மாடு தீவனம் தின்னாது. கால்கள் நொண்டும். இதற்கு குதிரை வலிப்பு செடி 100 கிராம், அத்திப்பட்டை 100கிராம், சுக்கு 100 கிராம், சீரகம் 100 கிராம், சிறியா நங்கை 100 கிராம் மற்றும் சிறுகுறிஞ்சான் 100 கிராம் ஆகியவற்றை இடித்து வெந்நீரில் கலக்கி ஒரு நாளைக்கு 2 வேளை 3 நாட்கள் கொடுத்தால் சரியாகி விடும்.

**விஷக்கடிக்கு (சிறு பாம்புக் கடி)**

மாடு புல்லரித்து காணப்படும் சிறு சிறு தடிப்பு ஏற்படும். இதை குணப்படுத்த சிறு குமிட்டி வேர் , ஈசுவரன் மூலிகை 50 கிராம், கொல்லம் கோவை கிழங்கு 100 கிராம், விஷ மல்லி இலை 200 கிராம் மற்றும் சீரகம் 50 கிராம் இடித்து வெந்நீரில் காய்ச்சி ஆற வைத்து 3 வேளை கொடுத்தால் விஷம் இறங்கும்.

**இளங்கொடி வெளியேற**

ஓரளி பச்சிலை 200 கிராம், எள்ளுச்செடி 150 கிராம் இரண்டையும் இடித்து புளித்த தண்ணீரை தேவையான அளவு கலந்து கொடுத்தால் 2 மணி நேரத்தில் இளங்கொடி விழுந்து விடும்.

**அதிக பால் சுரக்க**

காயச்சல் ஏற்படும் , பால் மடிவில் உள் வியாதி இருக்கும். இதற்கு மனமுருக்கி பச்சிலை 300 கிராம் எடுத்து இடித்து , சாறு எடுத்து அதே மாட்டின் பால் 1/2 லிட்டர் எடுத்து கலந்து கொடுத்தால் மனமுருகி பால் சுரக்கும்.

**புள்ளு முறி நோய்க்கு**

தீனி தின்னாது. புல்லரித்து காணப்படும். வயது வந்த பெண்ணைக் கொண்டு முறத்தில் அடுப்புச் சாம்பல் எடுக்கச் சொல்லி தலையில் இருந்து வால் வரை மாட்டை சுற்றி 3 தடவை புடைத்தால் சரியாகிவிடும். அதோடு குண்டு முத்து இலை கழுத்தில் கொடியுடன் கட்ட வேண்டும். வெந்நீர் ஆற வைத்து கொடுக்க வேண்டும். எக்காரணங்கொண்டும் மாட்டை தொடக்கூடாது.

முகவரி
பெரிய அய்யாவு
சல்லிகோடங்கிப்பட்டி அஞ்சல் , பாலமேடு வழி
சத்திர வெள்ளாளப்பட்டி அஞ்சல்
வாடிப்பட்டி தாலுகா , மதுரை மாவட்டம்

## பேடரல்லி திரு. சின்னண்ணனின் கால்நடை மூலிகை வைத்தியம்



தருமபுரி மாவட்டம், பேடரல்லி கிராமத்தில் திரு. சின்னகண்ணன் வசித்து வருகின்றார். இவருக்கு வயது 58 ஆகிறது. 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருடைய தாத்தா பாரம்பரியமாக கால்நடை மூலிகை வைத்தியம் செய்து வந்ததால் அதைப் பார்த்த இவருக்கும் ஆர்வம் ஏற்பட்டது. தற்போது 25 கிராமங்களில் கால்நடை மூலிகை வைத்தியம் செய்து வருகின்றார்.

**சப்பை கட்டுக்கு**

மாடுகளுக்கு நெஞ்சடைத்து வரும். அதிகம் உஷ்ணம் உண்டாகும். குடி தண்ணீரில் உள்ள கிருமி மூலம் இந்த நோய் பரவும். இதற்கு கோழி குஞ்சின் குடலை எடுத்துவிட்டு நன்றாக உரலில் குத்தி பின் ஆட்டுக்கல்லில் ஆட்டி கொட்டத்தால் மாடுகளுக்கு காலை மாலை 2 வேளையாக கொடுத்தால் 3 நாட்களில் நோய் குணமாகும்.

**ஊதுவட்டைக்கு (வயிற்று பொருமல்)**

மழை பெய்த உடன் புதிதாக வளரும் புல்லை சப்பிடுவதால் இந்நோய் உண்டாகும். இதற்கு 1/4 கிலோ புளியை நன்கு கரைத்துக் கொண்டு இதனுடன் 1/2 லிட்டர் ஆமணக்கு எண்ணெய் கலந்து ஒரு கொட்டத்தில் 1 நாளைக்கு 2 முறை கொடுத்தால் சரியாகிவிடும்.

**மூச்சு அடைத்தலுக்கு**

நோய் வந்த மாடுகளின் வாயில் நீர் வடியும், மூக்கிலும் நீர் வடியும், மூச்சு அடைத்து திணறும். இதற்கு சத குப்பை விதை 100 கிராம், இஞ்சி 100 கிராம் , வால் மிளகு 50 கிராம் மற்றும் திப்பிலி 50 கிராம் நன்றாக இடித்து வெந்நீரில் 2 முறை கொடுத்தால் சரியாகி விடும்.

**செம்பா நோய்க்கு**

கண் இருண்டிருக்கும் ; தோல் தடித்திருக்கும். வெங்காயம் 1/4 கிலோ , எலுமிச்சம் பழம் 5 , பூண்டு 5 கிராம் மற்றும் வெண்கடுகு 5 கிராம் இடித்து வெந்நீரில் காலை மாலை 2 முறை கொடுத்தால் சரியாகி விடும்.

**வாதத்துக்கு**

இந்த நோயை குணப்படுத்த விடத்தழை 100 கிராம், வாத நீரி தழை 100 கிராம் , இரண்டையும் இடித்து வேப்பெண்ணெய் 100 மி.லி கலந்து உள்ளுக்குள் 2 தடவை ஒரு நாளைக்கு கொடுத்தால் சரியாகிவிடும்.

**வயிற்று வலிக்கு**

தீவனம் அதிகளவு உண்பதாலும் , அசுத்த நீர் குடிப்பதாலும் வயிற்றுவலி ஏற்படும் . பிரண்டை 1 கொத்து , புங்கம்பட்டை 50 கிராம் மற்றும் பீநாரி மரப் பட்டை 50 கிராம் இடித்து சாறு வடித்து 1/2 லிட்டர் விளக்கெண்ணெய் கலந்து கொடுத்தால் சரியாகிவிடும்.

வைத்தியர் முகவரி
திரு.கு. சின்னகண்ணன்
பேடரல்லிகிராமம்
இந்தூர் வழி
தருமபுரி மாவட்டம்

## தோடா மலைவாழ் மக்களின் பாரம்பரிய வைத்தியம்

காட்டுப் புகையிலைச் செடி என்ற போல்க்கி (Lobelia nicotianafolia ) அடிபட்ட காயத்திற்கு , ஊசி பழம் செடி என்ற தொக்கமுல்லு பல்வலிக்கும் , கப்போட்டிதூர் என்ற செடி கன்றுக்கு பால் தராத மாட்டிற்கும், அறுபதாம் தழை நாடாப் புழுவிற்கும் தரப்படுகிறது.

நீதிராஜன்
நீர்க்காசிமந்து
சாண்டிநெல்லா
ஊட்டி

## சல்லிகோடாங்கிபட்டி திரு. வெள்ளையின் கால்நடை மூலிகை வைத்தியம்



மதுரை மாவட்டம் சல்லிகோடாங்கி பட்டி கிராமத்தில் மு.வெள்ளை வசித்து வருகின்றார். இவருக்கு வயது 50 ஆகின்றது. இவருடைய தாத்தாவின் வைத்திய அனுபவத்தை பெற்று கால்நடைகளுக்கு

மட்டுமல்லாது மனிதர்களுக்கும் வைத்தியம் செய்து வருகின்றார். 25 கிராமங்களில் தொடர்பு கொண்டு கால்நடைகளுக்கு வைத்தியம் செய்து வருகின்றார்.

**விஷக்கடிக்கு**

வெள்ளெருக்கு வேர் , சுங்கம் வேர் , கொல்லங்கோவை கிழங்கு , சக்கரகொன்னை இலை (ஒவ்வொன்றும் 25 கிராம் ) சிறியா நங்கை இலை தலைசுருளி வேர் 25 கிராம் எல்லாவற்றையும் நிழல் காய்ச்சல் போட்டு விஷமல்லி கொடி 25 கிராம் சேர்த்து தூள் செய்து வைத்துக் கொண்டு தேவையான போது 25 கிராம் தூள் ஒரு நாளைக்கு ஒரு மாட்டிற்கு போட சரியாகும். சரியாக வில்லை எனில் மேலும் ஒரு வேளை அல்லது 2 வேளை போட சரியாகும்.

**கழிச்சலுக்கு**

கல் அத்தி 50 கிராம், சீரகம் 25 கிராம் மற்றும் வெந்தயம் 50 கிராம் இடித்து உருண்டையாக்கி காலை , மாலை மற்றும் மறு நாள் காலை என மருந்தை 3 வேளை கொடுக்க சரியாகும்.

**இரத்தக் கொதிப்புக்கு**

கொல்லன்கோவை கிழங்கு 100 கிராம் கருடங்கிழங்கு 50 கிராம், விஷமல்லி கொடி 50 கிராம், சீரகம் 50 கிராம் , வெங்காயம் 50 கிராம் நன்றாக அரைத்து வடி தண்ணீரில் 3 வேளை கொடுத்து கண்மாய் தண்ணீரில் கழுவ சரியாகும்.

**கண்ணில் பூ விழுந்தால்**

சிறுதும்பை இலை 20 எண்ணிக்கை 2 மிளகு போட்டு இடித்து வெள்ளை துணியில் பிழிந்து கண்ணில் சாறுவிட பூ மாறும். மூன்று நாள் காலையில் விடவும்.

**கண்ணில் நீர் வடிந்தால்**

வெற்றிலை 2 எண்ணிக்கை , புகையிலை சிறிது , பாக்கு , சுண்ணாம்பு சேர்த்து வாயில் போட்டு மென்று இரண்டு வேளை பாதிக்கப்பட்ட கண்ணில் துப்ப சரியாகும்.

**குந்து நோய்க்கு**

நாட்டுக்கோழிமுட்டை 1 , வேப்ப எண்ணெய் , திப்பிலி 50 கிராம் நன்றாக திப்பிலியை இடித்து கோழி முட்டை வேப்பெண்ணெய் சேர்த்து உருண்டையாக காலை மாலை இரண்டு வேளையும் கொடுக்க வேண்டும்.

**மாடுகள் பலப்பட**

சோற்றுக் கற்றாழை 2 மடல் , பிரண்டை கொல்லங்கோவைக் கிழங்கு, 1 சிறியா நங்கை கைப்பிடி இடித்து (நீராகார தண்ணீரால்) உருட்டி 3 வேளை கொடுக்க சரியாகும்.

**இளங்கொடி போடாததற்கு**

நாட்டு ஓரலி கைப்பிடி அளவு இடித்து புளித்த தண்ணீரில் கலந்து 2 வேளை கொடுக்க கரியாகும் (அல்லது)

ஆணை நெருஞ்சி 2 செடியை எடுத்து புது சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு அலசினால் எண்ணெய் போல் வரும். அந்த தண்ணீரை காலை மாலை ஊற்ற கொடி வெளியேறும்.

**சினை பிடிக்காததற்கு**

சோற்றுக் கற்றாழை சோறு 150 கிராம் மூன்று நாளைக்கு காலையில் கொடுக்க கர்ப்பப்பை பூச்சிகள் மடிந்து சினைக்கு வரும். அல்லது கொண்டை கடலை முளைகட்டி காடி நீரில் மூன்று நாள் கொடுக்க சரியாகும்.

வைத்தியர் முகவரி
திரு. வெள்ளை
சல்லிகோடங்கிப்பட்டி அஞ்சல்
பாலமேடு வழி
சத்திர வெள்ளாப்பட்டி அஞ்சல்
வாடிப்பட்டி தாலுகா , மதுரை மாவட்டம்

## ஆவாரங்குளம் திரு. தங்கச்சாமித்தேவரின் கால்நடை மூலிகை வைத்தியம்



ஆவாரங்குளத்தில் வசிக்கும் தங்கச்சாமித் தேவருக்கு 65 வயதாகிறது. இவர் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதில் 22 வருட அனுபவம் உடையவர். இவரது 20 ஏக்கர் நிலத்தில் கடலை , துவரை , பாசிப்பயறு , வரகு மற்றும் நெல் பயிர்களை சாகுபடி செய்யும் பெரிய விவசாயி ஆவார். அம்மா வழி தாத்தா மூலம் வைத்திய முறைகளை கற்றுக் கொண்டார். வைத்தியம் செய்வதற்கு கட்டணம் எதுவும் பெறுவதில்லை.

**குந்து நோய்க்கு**

சோர்வுடன் , கால்கள் நொண்டியபடி இருக்கும். அதிகக் காற்றுக் காலங்களில் கொழுத்த மாடுகளை இந்நோய் தாக்கும். தலைச்சுருளி (ஈஸ்வர மூலிகை) இலை 100 கிராம், சிறு தும்பை இலை 100 கிராம், குப்பை மேனி 100 கிராம் கோழி ஒன்றை அடித்து கழுத்துப் பாகக் கறியுடன் 3 வகை இலைகளையும் இடித்து வேப்ப எண்ணெயுடன் கலந்து ஒரே தடவையில் தின்னக் கொடுக்க சரியாகும்.

**வயிறு உப்பிசத்துக்கு**

1/4 கிலோ புளியைக் கரைத்து 2 எள்ளுச் செடி இலையை இடித்து இரண்டையும் கலந்து ஒரே தடவையில் தர வேண்டும்.

**ரத்தக் கழிச்சலுக்கு**

நீரில் ரத்தம் வந்தால் காரஞ் செடி வேரைபட்டை உரித்து நன்கு அரைத்து சீரகம் 5 கிராம் சின்னவெங்காயம் 1/4 கிலோ இரண்டையும் தனித்தனியே அரைத்து மாங்கொழுந்து நாவல் கொழுந்து மற்றும் இலுப்பக் கொழுந்து மூன்றையும் அரைத்து அனைத்தையும் ஒன்றாகக் கலந்து ஒரே தடவையில் கொடுக்க வேண்டும்.

**குதிரை வலிப்புக்கு**

ஓரிடத்தில் நில்லாமல் ஓடிக் கொண்டும், தரையில் முட்டி மோதிக் கொண்டும் இருக்கும்.

வேப்ப எண்ணெய் 1 லிட்டரை நன்கு காய வைத்து பின்னர் வேலிப்பருத்தி இலையை துணியில் கட்டிக் கொண்டு காய்ந்த எண்ணெயில் துணி மூட்டையை நனைத்து எடுத்து கால்நடைகளுக்கு ஒத்தடம் தர வேண்டும் .

**இளைப்பு (நாயிரைப்புக்கு)**

ஆனை நெருஞ்சி இடித்து சீரகம் அரைத்து வெங்காயம் இடித்து மூன்றையும் பாலில் கலந்து காலை மாலை மற்றும் மறுநாள் காலை சாப்பிடத்தர வேண்டும்.

வைத்தியர் முகவரி
திரு.மு. தங்கச்சாமித் தேவர்
த/பெ. முத்துஇருளத்தேவர்
ஆவாரங்குளம், புல்வாய்க்கரை அஞ்சல்
திருப்புவனம் வழி , திருச்சுழி தாலுகா
விருதுநகர் மாவட்டம்

தொகுப்பு : இல. விஜயகாமாட்சி , சேவா

**தோடா எருமை இரகம்**



ஊட்டி மற்றும் தாளவாடிப் பகுதியில் அங்குள்ள ஆதிவாசிகளால் இந்த எருமை இரகம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த எருமை நேரத்திற்கு 2 லிட்டர் வரை பால் கொடுக்கிறது. பாலின் கொழுப்புச் சத்து 8.2 சதவீதம் இந்த எருமையின் கொம்புகள் காட்டெருமை போன்று அகலமாக விரிந்து அரை வட்டமாக இருக்கும். இது தினமும் காட்டில் மேய்ந்து வீடு திரும்பும்.

## எழுவணி திரு. ஆறுமுகத்தின் கால்நடை வைத்திய முறைகள்



விருதுநகர் மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள எழுவணி கிராமத்தில் ஆறுமுகம் வசித்து வருகிறார். இவருக்கு வயது 55 . இவர் கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளித்து வருகிறார். இவரது சிகிச்சை முறைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**உப்பிசத்துக்கு**

சுக்கு 25 கிராம், மிளகு 10 கிராம் , வெற்றிலை 50 கிராம் , கொடி பிரண்டை 4 தண்டு இவைகளை உரலில் நன்கு இடித்து வெந்நீர் 1/2 லிட்டரில் கலந்து, உப்பு 50 கிராம் சேர்த்து கலக்கி காலையில் குடிக்கக் கொடுக்கவும்.

**கழிச்சலுக்கு**

ஆவாரங்கொழுந்து 1 கைப்பிடியளவு எடுத்து அரைத்துக் கொண்டு அதனுடன் சீரகம் 25கிராம், வெங்காயம் 150 கிராம் ஆகிய இரண்டையும் சேர்த்து

அரைத்து 1/4 லிட்டர் மோரில் கலந்து 1 அல்லது 2 தடவையாக குடிக்க கொடுக்க வேண்டும். (அல்லது) வாழைப்பூ 1, வெங்காயம் 150 கிராம் , சீரகம் 50 கிராம் இடித்து உருட்டிக் கொடுக்க வேண்டும்.

**ரத்தக் கழிச்சலுக்கு**

வாழைப்பூ மட்டையை அகற்றி விட்டு அதனுடன் ஆவாரங்கொழுந்து ஒரு கைப்பிடி எடுத்து சேர்த்து இடித்து மோரில் கலந்து குடிக்கக் கொடுக்கவும்.

**வாயில் நுரை தள்ளுதல்**

வரி குமட்டி சாறு 100 மி.லி சோற்று கற்றாழைச் சாறு 100 மி.லி ஆடு தீண்டாப்பாளைச் சாறு 100 மி.லி , வேப்ப எண்ணெய் 50 மி.லி ஒன்றாக கலந்து வைத்துக் கொண்டு 50 கிராம் கருப்பட்டியை முதலில் தின்னக் கொடுத்துவிட்டு 15 நிமிடம் கழித்து மருந்துக் கலவையைக் கொடுக்க குணமாகும்.

**கண்ணில் பூ விழுந்தால்**

சிறிதளவு ஆமணக்கு கொழுந்து, சிறிது சீரகம் , வெங்காயம் , சிறிது மிளகு சேர்த்துக் தட்டி கண்ணில் பிழிந்து விட வேண்டும் (அல்லது) சிறிது ஊமத்தை இலையைத் தட்டி ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து ஒரு முறை மட்டும் கண்ணில் பிழிந்து விட வேண்டும்.

புண்ணுக்கு

மாவிலிங்கம் இலை ஒரு கைப்பிடியளவு அம்மியில் அரைத்து பாக்களவு வெள்ளை சுண்ணாம்பு சேர்த்துப் பிசைந்து நாள் ஒன்றுக்கு ஒரு வேளை கட்டினால் போதுமானது.

வைத்தயர் முகவரி
திரு.எஸ்.என் ஆறுமுகம்
எழுவணி , முக்குளம் அஞ்சல்
திருப்புவனம் வழி , திருச்சுழி தாலுகா
விருதுநகர் மாவட்டம்
தொகுப்பு :இல . விஜயகாமாட்சி , சேவா

## திரு. சந்தரின் டிரைலர் இணைக்கப்பட்ட ஸ்கூட்டர்

மதுரை , 1234 திருப்பாலை , ஐயர் பங்களாவில் திரு.சி.ஆர் சந்தர் வசித்து வருகிறார். இவர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

தற்பொழுது இவர் வீடுகளிலும், அலுவலகங்களிலும் அழகுத் தோட்டங்கள் அமைத்து வருகிறார். இவருடைய தொழிலில் முக்கியமாக செங்கல் , சிமெண்ட் , சிறுகூழாங்கற்கள் , பட்டை கற்கள் அழகுப் பொருட்கள் மற்றும் அழகுச் செடிகள் குறைந்த அளவில் கொண்டு செல்ல வேண்டிவரும். பெரும்பாலும் கட்டிடப் பொருட்கள் , செடி வகைகள் மற்றும் அழகுப் பொருட்கள் போன்றவற்றை எடுத்துச் செல்ல மாட்டு டயர் வண்டி , மினி வேன் போன்ற வண்டிகளை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வந்தார். ஆனால் சில சமயங்களில் மிகக் குறைவான பொருட்களையும் கொண்டு செல்ல வேண்டி வரும். அப்படிச் செல்லும்பொழுதும் இந்த வண்டிகளுக்கான வாடகை குறைக்கப்படுவதில்லை. முழு வாடகையையே கொடுக்க வேண்டி வரும். அதனால் தாம் செய்யும் தொழிலில் சில நேரங்களில் இலாபம் கிட்டாமலும் நஷ்டத்திற்குச் செய்ய வேண்டிய நிலை உருவாகும். இவர் தன்னுடைய ஸ்கூட்டரை தன்னுடைய வேலைகளுக்காக வேலை நடக்கும் இடங்களுக்குப் போய் வர பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

சில சமயங்களில் பைகளில் கொண்டு செல்லும் அளவுக்கு உள்ள பொருட்களை ஸ்கூட்டரில் கால் வைக்கும் பகுதியில் வைத்து எடுத்துச் சென்று விடுவார். ஆனால் சில நேரங்களில் ஸ்கூட்டரில் கொண்டு செல்ல முடியாமலும் டயர் வண்டி மற்றும் மினி வேன்களில் எடுத்துச் செல்ல முடியாமலும் இருக்கும் அளவுள்ள பொருட்களை வேறு வழியில்லாமல் டயர் வண்டிகளிலோ அல்லது மினி வேன்களிலோ தான் எடுத்துச் செல்ல முடியும்.

டயர் வண்டிக்கும், மினி வேனுக்கும் கொடுக்க வேண்டிய வாடகை அதிகமாக இருந்ததை கவனத்தில் கொண்டு நாம் ஏன் நமது ஸ்கூட்டரையே பொருள் ஏற்றும் வாகனமாக மாற்றக் கூடாது என யோசனை தோன்றியது.

இந்த யோசனையை செயலாக்க முனைந்தார். ஆனால் தான் செய்யப் போகும் தனது ஸ்கூட்டர் மாற்றத்தில் , பொருட்கள் எற்றிச் செல்லும் வண்டியாகவும் அதே சமயத்தில் அது தேவைப்படாத போது பயணம் செய்யக்கூடிய ஸ்கூட்டராகவும் பயன்பட வேண்டும் என நினைத்தார். ஆகவே அதற்கு தகுந்தாற்போல் தன்னுடைய ஸ்கூட்டரை டிரெய்லரோடு இணைக்கப்பட்ட ஸ்கூட்டராக வடிவமைத்தார்.

**வண்டியின் அமைப்பு**

ஸ்கூட்டரின் பின்புற சீட்டை எடுத்துவிட்டு அந்த இடத்தில் பொருட்கள் எடுத்துச் செல்லும் டிரெய்லரை பொருத்தும் படியாக அமைத்தார். அதே சமயத்தில்



அந்த டிரெய்லர் ஸ்கூட்ட ரோடு இணைத்தும் கழற்றியும் எடுப்பதுபோல் அமைக்கப்பட்டது. இப்பொழுது பொருட்கள் எடுத்துச் செல்லும் இணைப்பை கழற்றி விட்டுவிட்டு உட்கார்ந்து செல்லும் வண்டியின் சீட்டை எடுத்துவிட்டு பொருத்திக் கொண்டு பயணம் செய்ய ஏதுவாக வடிவமைக்கப்பட்டது.

பொருட்கள் எடுத்துச் செல்லும் டிரெய்லர் 1 மீட்டருக்கு1 மீட்டர் சதுர வடிவில் 1 அடி உயரம் கொண்ட இரும்பு தொட்டி போன்ற அமைப்பில் செய்து விட்டு அதை இரண்டு சக்கரங்கள் கொண்ட வண்டியின் சென்ட்ரல் ஆக்சில் பொருத்த வேண்டும். சென்ட்ரல் ஆக்சிலின் நடுப்பகுதியில் பின்பக்கத்தில் இணைப்புப் பகுதியை உருவாக்க ஸ்கூட்டரின் பின் பகுதியில் இணைப்பது போல் செய்யப்பட்டிருக்கும். இவ்வாறு டிரெய்லர் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வண்டியில் 1/4 டன் பொருட்கள் வரை ஏற்றிச் செல்லலாம்.

**டிரெய்லர் இணைக்கப்பட்ட ஸ்கூட்டரின் பயன்கள்**

1. பயணத்திற்கு பயன்படும் ஸ்கூட்டரே பொருட்கள் ஏற்றிச் செல்வதற்கு பயன்படுகிறது. இதற்கென்று தனியாக ஸ்கூட்டர் வாங்க வேண்டி வரும்.
2. ஸ்கூட்டரில் பெரிய மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை.
3. பயணம் செய்யக்கூடிய எரிபொருளிலே பொருட்களையும் கொண்டு செல்லலாம்.
4. பொருள்கள் ஏற்றிச் செல்லும் வண்டியும் பெரிய தொழில் நுட்பம் உடையதாக இல்லை.
5. குறைந்த அளவில் பொருட்களை ஏற்றிச் செல்ல அதிக வாடகை கொடுத்து வாடகை வண்டி (டயர் வண்டி , மினி வேன் ) எடுப்பது தேவை இல்லை.
6. பொருட்கள் செல்லும் டிரெய்லரையும், ஸ்கூட்டரையும் இணைத்து கழற்றுவது எளிது.
7. ஸ்கூட்டர் ஓட்டத் தெரிந்த யாரும் பொருட்கள் இணைத்த டிரெய்லரையும் சேர்த்து ஓட்டலாம்.
8. இந்த டிரெய்லருக்கு தனிப்பட்ட முறையில் எந்தவித பெர்மிட் போன்ற உரிமங்கள் (உத்தரவுகள்) அரசாங்கத்திடமிருந்து வாங்கத் தேவையில்லை.
9. பழைய ஸ்கூட்டரை வாங்கி டிரெய்லர் இணைக்கப்பட்ட ஸ்கூட்டராக மாற்றிக் கொள்ளலாம்.
10. டிரெய்லர் இணைக்கப்பட்ட ஸ்கூட்டர் வடிவமைப்பதற்கு பெரிய அளவில் தொழில் நுட்பம் தேவையில்லை. மேலும் பெரிய தொழிற்சாலைகள் வைத்துத்தான் செய்ய வேண்டிய அவசியமில்லை.
11. சாதாரண லேத் பட்டறைகள் வைத்து இதை உருவாக்கி விடலாம்.

முகவரி
திரு. சி. ஆர் சந்தர்
ஜனனி கார்டன்ஸ் , ஐயர் பங்களா
ஸ்ரீநகர் , திருப்பாலை கிராமம்
ஆணையூர் அஞ்சல் , மதுரை – 17
போன் : 9842163900
681970
தொகுப்பு : பாண்டி , சேவா

## ஆத்துவயல் திரு. வேதமுத்துவின் கால்நடை மூலிகை வைத்திய முறைகள்



சிவகங்கை மாவட்டம் பெத்தான்வலசை கிராமத்தை சேர்ந்த திரு. வேதமுத்துவுக்கு 60 வயது ஆகிறது. எட்டாம் வகுப்புவரை படித்துள்ளார். கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதில் 28 வருடம் அனுபவம் இவருக்கு உண்டு. குறிப்பாக கோமாரி , காய்ச்சல் , மூக்கடைப்பான் மற்றும் வயிறு சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் வல்லவர். குடும்பப் பாரம்பரிய முறையில் வைத்தியம் கற்றிருந்தாலும் கட்டணம் ஏதும் பெறுவது இல்லை. கால்நடை வைத்தியம் செய்வது தவிர விவசாய கூலி வேலையும் செய்து வருகிறார்.

**கோமாரிக்கு**

வாயில் சூடாக நீர் வடியும் : நாக்கு புண்ணாகியிருக்கும். 2 மலைவாழைப் பழத்தை 150 மி.லி விளக்கெண்ணெயுடன் பிசைந்து ஊட்ட வேண்டும். மாட்டுத் தொழுவத்தைச் சுத்தமாகக் கழுவி பினாயில் தெளிக்க வேண்டும்.

**காய்ச்சலுக்கு**

வாயில் நீர் வடியும், கால்களை ஊன்றாமல் உதறி கீழே விழும். நாட்டுக் கோழி முட்டை ஒன்றை உடைத்து வாயில் ஊற்றி விட வேண்டும். மஞ்சனத்தி இலையும் மரப்பட்டையும் கலந்து அரைத்து (கோழி முட்டை அளவிற்கு உருட்டி) பாலில் கரைத்து ஒரே தடவையில் கொடுக்க வேண்டும்.

**முக்கடைப்பானுக்கு**

மூக்கில் நீர் வடியும். மூச்சுத் திணறித்தடுமாறும்.

கண்டங்கத்தரி 5 முதல் 6 பழத்தை இடித்து வெள்ளாட்டு சிறுநீருடன் மாலையில் ஊற வைத்து காலையில் பழத்தை மட்டும் வெள்ளைத் துணியில் சுற்றிக் கொண்டு மூக்கில் பிழிந்து (1–2 சொட்டு) விடவும்

**இளங்கொடி வெளியேற**

1/2 கிலோ அளவு எள்ளு இலையை இடித்து உருட்டி வாயில் போட்டு விட்டால் 1 மணிநேரத்தில் இளங்கொடி வெளியேறும்.

**கண்ணில் பூ விழுந்தால்**

கருவிழியில் வெண்புள்ளிக்கு கோவை இலையை சிறிது உப்புடன் கலந்து கண்ணில் பிழிந்து விட குணமாகும்.

**உப்பிசத்துக்கு**

தேரைத் தவளை கால்நடைகளில் மீது விழுந்தால் ஒவ்வாமையினால் வயிறு ஊதும் வாய்ப்புள்ளது.

பசுமாட்டுக்கு ஆண் குழந்தை நீரும், காளை மாட்டிற்கு பெண் குழந்தை நீரும் எருவறட்டிச் சாம்பலைப் பிசைந்து வயிற்றில் தடவினால் 1 மணி நேரத்தில் வீக்கம் குறையும்.

முகவரி
திரு. வேதமுத்து
த/பெ. மைக்கேல்
பெத்தான் வலசை கிராமம்
ஆத்துவயல் அஞ்சல் , இளையான்குடி தாலுகா
சிவகங்கை மாவட்டம்

தொகுப்பு : இல. விஜயகாமாட்சி , சேவா

## சாலை வெங்கடேசனின் கால்நடை மூலிகை வைத்தியம்

சாலை வெங்கடேசனுக்கு 26 வயதாகிறது. இவர் இளைமையிலேயே பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பல நூல்களை கற்றார். இவருடைய குடும்பத்தில் பாரம்பரியமாக கால்நடைகளுக்கு மூலிகை வைத்திய முறைகளை அனுபவத்தில் உணர்ந்தார். தற்சமயம் அனந்த மார்க்க இயக்கத்தில் சேர்ந்து நோயாளிகளுக்கு சிகிச்சை செய்து வருகிறார். இவர் குணப்படுத்தும் முக்கிய நோய்கள் புற்று நோய் , ஆஸ்துமா, மூலம் , நரம்புத் தளர்ச்சி , சைனஸ் மற்றும் சர்க்கரை வியாதி போன்றவைகளாகும்.

**வயிறு உப்பிசம், தண்ணீர் மற்றும் இரை எடுக்காமல் இருந்தால்**

மிளகரணைப் பட்டை , செவக்காடு பூண்டு , மர நெல்லிப்பட்டை, சேற்றுப்புண் பச்சிலை , கல்லத்தி , வெப்பாலைப்பட்டை, கல்லரசன் , குருவுபூண்டு , வேங்கைப்பட்டை, வேப்பம்பட்டை, புங்கம் பட்டை , மகாலிக்கிழங்கு , ஜீபட்டை , சிறிய நன்னாரி வேர், பனங்கிழங்கு , தண்ணீர் விட்டான் கிழங்கு , சந்தானம் பட்டை , மருதம்பட்டை, உடுப்பைப்பட்டை , பிரண்டை , மிளகு , சீரகம் , ஓமம் , பெருங்காயம், வாய்விளங்கம், மஞ்சள் , சுக்கு நெல்லிக்காய், புளியங்காய் , உப்பு , குமாளம்பட்டை, போன்ற மூலிகைப் பொருட்களை பசுமையாக இடித்து பாறை மேல் போட்டு விட வேண்டும். இதனை கால்நடைகளுக்கு காட்டினால் அவைகளே தானாக சுவைத்து தின்று விடும். இவ்வாறு செய்த பின்பு கால்நடைகளுக்கு ஒரு நாள் முழுவதும் தண்ணீர் காட்டக் கூடாது. இவ்வாறு வருடத்திற்கு இரண்டு முறை செய்ய வேண்டும். வானியம்பாடி பகுதியில் இதனை பொங்கலுக்கு அடுத்த நாளும் பின்பு 6 மாதம் கழித்து வரும் புளியங்காய் சீசனிலும் (ஜுன்) செய்வார்கள்.

**மாடுகளுக்கு கொம்பு நேராக வளர**

சில மாடுகளுக்கு கொம்பு நேராக இல்லாமல் சாய்ந்து விகாரமாக வளரும். இதற்கு பௌர்ணமி அல்லது அமாவாசை நாளன்று மூலிகை ஊறல் போட்டு அடிக்க வேண்டும். வெப்பாலைப்பட்டை , காட்டு வெங்காயம் , பொருமுகை இலை போன்றவைகளை ஒரு மண்பானையில் போட்டு நீர் ஊற்றி ஒரு வார காலம் ஊறல் போட்டு எடுக்க வேண்டும்.

**சினைபிடிக்காமைக்கு**

சினை தங்காத கால்நடைகளுக்கு செம்பிரண்டை கிழங்கு , தண்டு, இலை ஆகியவற்றை சிறு துண்டுகளாக வெட்டி நீருடன் சேர்த்து காய்ச்சி கசாயம் தயாரித்து ஒரு கொட்டான் அளவு உள்ளே புகட்டி கருப்பையை சுத்தம் செய்து பின்பு கருவூட்டம் செய்தால் சினை தங்கும்.

**பால் அதிகம் சுரக்க**

வறுத்து அரைத்த கம்பு மாவுடன் சுரைக்காய் சேர்த்து உள்ளே புகட்டினால் பால் அளவு கூடுகிறது (அல்லது) முயல் காது இலை செடியின் கிழங்கு எடுத்து மாடு சினையாகி 4 மாதம் கழித்து பின் உண்ணக் கொடுத்து விட்டால் அதிக பால் தருகிறது. (ஆனால் இது மாட்டிற்கு அதிக சூட்டைத் தருவதால் அதன் உடல் நிலை பாதிக்கப்பட்டு மெலிவு ஏற்படும்.)

**கண்ணில் அடிபட்டால்**

சிறிது உப்புக் கல்லுடன் சத்திச் சாரணை அல்லது பெருமருந்து கொடியை (கருடங்கொடி) கசக்கி கண்ணில் சொட்டு விட வேண்டும்.

**அடிபட்ட வீக்கத்திற்கு**

அரசம்பட்டையுடன் கேழ்வரகு மாவு போட்டு நீர் விட்டு நன்றாக காய்ச்சி அடிபட்ட இடங்களில் பத்தாக போட்டு விட்டால் சரியாகி விடும்.

**சேற்றுப் புண்ணிற்கு**

சேற்றுப் புண் பச்சிலையை அரைத்து தடவாம் அல்லது வேப்ப எண்ணையை தடவலாம்.

**வெட்டுக் காயத்திற்கு**

விராலி இலையை நிழலில் காய வைத்து தூள் செய்து வெட்டுக் காயம்பட்ட இடங்களில் வைத்து கட்டிவிட வேண்டும்.

**கொழுப்படைப்பிற்கு** (ஆடுகளில்)

சில ஆடுகள் அதிகமான கொழுப்பு வைத்து அடைப்பு ஏற்படுவதால் இறந்து விடுகிறது. இதை தடுக்க மிளகரணை வேருடன் நீர் சேர்த்து காய்ச்சி கசாயம் வைத்து கொட்டானில் உள்ளே புகட்ட வேண்டும்.

சாலை வெங்கடேசன்
த/பெ. சி. வரதராஜ்
நன்னாரி கிராமம்
வெள்ளக்குட்டை அஞ்சல்
வாணியம் பாறை
வேலூர் மாவட்டம் – 635 752
தொலைபேசி : 04174 – 68256

## பணிக்கம்பட்டி திரு. கோபாலகிருஷ்ணனின் மண்புழு உரம்



கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் பணிக்கம்பட்டி கிராமத்தில் கோபால கிருஷ்ணன் வசித்து வருகிறார். இவருக்கு வயது 39 ஆகிறது. 30 ஏக்கர் நிலத்தில் இயற்கை விவசாயத்தைக் கடைப்பிடித்து வருவதுடன் குளித்தலை வட்டாரத்தில் கரும்பு உற்பத்தியாளர் சங்கத் தலைவராகவும் உள்ளார்.

விவசாயத்தில் இரசயான உரங்களை பயன்படுத்தினால் செலவு அதிகம் ஆவதுடன் நிலவளமும் பாதிக்கப்படுவதையும் உணர்ந்ததன் பேரில் இயற்கை வேளாண்மையில் ஆர்வம் ஏற்பட்டதாகக் கூறுகிறார். மேலும் நிலத்தை வளமாக்க மண்புழுவை உபயோகிக்கலாம் என்று முடிவெடுத்தார். திருச்சி வானொலியில் ஒலிபரப்பாகி வரும் ‘‘மண்ணும் மணியும்’’ நிகழ்ச்சியில் மண்புழு உரம் தயாரித்து நிலத்தை மேம்படுத்தும் முறை பற்றி அறிந்து மண்புழு உரம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு கடந்த 4 ஆண்டுகளாக மண்புழு உரம் உற்பத்தி செய்து தனது நிலத்தில் உபயோகப்படுத்துவதுடன் தனது விவசாய நண்பர்களுக்கும் வழங்கி வருகின்றார்.

**தேவையான பொருட்கள்**

1. சாணம் / கரும்புத் தோகை , சர்க்கரை ஆலைக் கழிவு , இலை தழைகள் , குப்பை
2. 10 அடி நீளம் , 5 அடி அகலம் 2.5 அடி ஆழம் கொண்ட சிமெண்ட் தொட்டி
3. சல்லடை
4. 1500 – 2000 எண்ணிக்கையிலான மண்புழுக்கள்
5. 15 அடி நீளம் 6 அடி அகலம் , 7 அடி உயரம் கொண்ட கொட்டகை

**தயாரிப்பு முறை**

சாணம் , கரும்புத் தோகை , சர்க்கரை ஆலைக் கழிவு மற்றும் இலை தழைகள் போன்றவற்றை தனியாக 2

மாதம் மக்க வைக்க வேண்டும். பின்பு இதனை மண்புழு தொட்டியில் நிரப்ப வேண்டும். அதில் ஈரமான சாணத்தை எடுத்து தோசைமாவு பக்குவத்துக்குப் பிசைந்து 2 அடுக்குகளில் தெளிக்க வேண்டும். அதாவது 21/4 அடி உயரம் நிரம்பிய உடன் 9'' நீளமும் 3'' அகலமுள்ள செங்கல்லை 2'' இடைவெளியில் பரப்ப வேண்டும். 1 வாரம் வரை இந்த தொட்டியில் சூடு தணியும் வரை தண்ணீர் தெளிக்க வேண்டும். இந்த தொட்டியில் 1500 முதல் 2000 எண்ணிக்கை கொண்ட மண்புழுவை விட வேண்டும். தினந்தோறும் காலையிலும், மாலையிலும் தண்ணீர் தெளித்து வர வேண்டும். 60 வது நாளில் தொட்டியில் மேற்பகுதியில் குருணை வடிவில் மண்புழு உரம் மேலே வரும். ஒரு அறுவடைக்கு 600 கிலோ உரம் கிடைக்கும்.

**பயன்கள்**

1. மண்ணில் உள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர்களான பூச்சி , புழு பூஞ்சானம் , சிலந்தி , அட்டை , பூரான் ஆகியவற்றின் எண்ணிக்கையை மிகுதியாகப் பெருக்கி மண் வளத்தைக் கூட்டுகின்றன.

2. பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை ஒரே சீராக மண்ணிலிருந்து எடுத்துக் கொடுப்பதால் அதிக மகசூலுக்கு வழி வகுக்கின்றது.

3. நிலத்தின் கீழ் மண் மேல் மட்டத்துக்கு புரட்டி விடப்படுவதால் மண்ணில் காற்றோட்டம் அதிகரிப்பதுடன் கழிவுப் பொருட்களை நன்கு மக்க செய்கின்றன.

முகவரி
எம். கோபாலகிருஷ்ணன்
பணிக்கம்பட்டி அஞ்சல்
குளித்தலை தாலுகா
கரூர் மாவட்டம் – 639 107
தொலைபேசி எண் : (04323) – 48431 , 48224

## கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி பெற்ற மாணவர்களின் அனுபவங்கள்

### பழனிமுத்துவின் அனுபவங்கள்

சேவா சங்கம் ஏற்பாடு செய்த 3 வார கால கால்நடை மூலிகை வைத்திய பயிற்சியில் 3 வது பிரிவின் (02–05–2001 லிருந்து 22–5–2001 வரை) கலந்து கொண்டேன். பயிற்சி முடிந்தவுடன் எங்கள் ஊருக்குச் சென்று ஆடு , மாடுகளுக்கு மூலிகை வைத்தியம் செய்தேன். இந்த வைத்தியத்தில் நல்ல பலன் கிடைத்ததால் என்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றேன்.

**கோழி கழிச்சல்**

மிகவும் சோர்ந்து தலையை தொங்கப் போட்டுக் கொண்டு இருக்கும். இரை தின்னாது. 2 அல்லது 3 நாட்களில் இறந்துவிடும். இதற்கு வெள்வேலம் பட்டையை நசுக்கி நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து ஆறியவுடன் 3 மிலி அளவு ஊசி மூலம் (அ) வாயைப் பிளந்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். 4 முதல் 5 மணி நேரத்தில் கோழி சுறுசுறுப்படைந்து இரை எடுக்கும்.

**கழிச்சல்**

ஆடு மாடு எதுவாக இருந்தாலும் கொம்பம்பாளை இலையை அரைத்து ஆடுகளுக்கு கோழி முட்டை அளவும் குட்டிகளுக்கு அதில் பாதியும், மாடுகளுக்கு குமட்டிக் காயளவும் கொடுத்தால் போதும். ஒரு நாள் ஒரு வேளை போதுமானது. தேவைப்பட்டால் மறுநாள் கொடுக்க வேண்டும். கழிச்சல் நிற்பதுடன் குடற்புழுக்களும் ஒழிந்து விடும். 6 ஆடுகளுக்கும் 1 எருமைக் கன்றுக்கும் இந்த வைத்தியம் செய்துள்ளேன்.

**தீனி தின்னாமை , அசை போடாமை**

சிற்றாமுட்டி , பிரண்டை , தும்பை துளசி , வெள்ளருகு, முசுமுசுக்கை இலை , தலைச்சுருளி இலை , கொழுஞ்சி சம அளவு எடுத்து மஞ்சள் , உப்பு கால் கிலோ , சீரகம் கலந்து அரைத்து குமட்டிக் காயளவு கொடுத்தால் சிறிது நேரத்தில் அசை போடும். மருந்து கொடுத்த பின் சாணம் போடும் போது நீர் போல கழியும். ஏனெனில் தலைச்சுருளி போன்ற மலமிளக்கிப் பொருட்கள் இருப்பதால் இது ஏற்படுகிறது.

ஆ) சில நேரங்களில் வயிற்றுவலி காரணமாகவும் தீனி தின்னாது. புரண்டு புரண்டு படுக்கும் எழுந்திருக்கும். சோர்வுடன் இருக்கும். வெற்றிலை 10 , இஞ்சி 20 கிராம் , மிளகு 10 கிராம், வெள்ளைப் பூண்டு 10 கிராம் நன்கு இடித்து 1 லிட்டர் நீரில் கலக்கி கொடுக்க வேண்டும். காலை 1 லிட்டர் நீரும் மாலையில் 1 லிட்டர் நீரும் (மருந்து கலக்கிய நீர் ) கொடுத்தால் போதும்.

**சொக்கிக் கொள்ளுதல்**

மரவள்ளிக் கிழங்கு கொழுந்து இலையைத் தின்பதால் சொக்கிக் கொள்ளும். இதற்கு குப்பை மேனி இலை கைப்பிடி அளவு சிறிதளவு புளி சேர்த்து அரைத்துக் கொடுத்தால் 1 மணி நேரத்தில் நிவாரணம் கிடைக்கும்.

க. பழனிமுத்து

த/பெ. கந்தசாமி
பொன்னாவரந்தோட்டம்
சிறுவாச்சூர்
சேலம் – 636 112

## சுந்தரமூர்த்தியின் அனுபவங்கள்

சேவா சங்கம் ஏற்பாடு செய்த 3 வார கால பயிற்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கால்நடை மூலிகை வைத்திய பயிற்சியின் 4 வது பிரிவில் (28.6.2001 லிருந்து 16.7.2001 வரை கலந்து கொண்டேன். பயிற்சி முடிந்தவுடன் எங்கள் ஊருக்குச் சென்று எங்கள் பகுதியில் மாடுகளுக்கு மூலிகை வைத்தியம் செய்தேன். இந்த வைத்தியத்தில் நல்ல பலன் கிடைத்தால் என்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றேன்.

**இரத்த முடை அடித்தால்**

சாப்டூரில் 8 வது வார்டில் உள்ள திரு . கிருஷ்ண மூர்த்தி என்பவரின் பால் மாட்டுக்கு இரத்த முடை அடித்தது. அதை நான் நேரில் சென்று பார்த்து பின்பு குண்டுமணி இலையை மூன்று வேளை அரைத்துக் கொடுத்தேன். அது சரியாகிவிட்டது.

**சினைமாட்டுக்கு விஷப்பாம்பு தீண்டியதற்கு**

எனது வீட்டுக்கு அருகில் உள்ள திருபெத்தனசாமி என்பவரின் மாட்டுக்கு காலில் பாம்பு கடித்துவிட்டது. நான் சென்று பார்த்த போது காலில் இரத்தம் லேசாக வந்தது. மாடு ஆறு மாதம் சினையாக இருந்ததால் மாட்டின் வயிற்றுக்குள் எந்த மருந்தும் கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். இதற்கு துளசியையும், குப்பை மேனி இலையையும் இடித்து அந்த சாற்றை கண்ணுக்கு மூன்று சொட்டு வீதம் 3 வேளை கொடுத்தேன். மாட்டின் மேல் புல்லரித்து இருந்தது நீங்கி இரை தின்ன ஆரம்பித்துவிட்டது.

**கண்ணில் நீர் வடிந்தால்**

எனது தெருவில் வசிக்கும் திருமதி பாப்பாத்தி என்பவரின் கன்றுக்கு கண்ணில் நீர் வடிந்து கொண்டு கண்ணை திறக்க முடியாமல் இருந்தது. அதற்கு அரை டம்ளர் மோர் எடுத்து அதனுடன் சிறிதளவு உப்பு கலந்து வாயில் வைத்து மூன்று நேரம் கொப்பளித்துத் துப்பச் சொன்னேன். மறுநாள் காலையில் இரண்டு வேளை செய்ததாக சொன்னார்கள். கண்ணில் நீர் வடிவது சரியானது.

**பால் அளவை கூட்ட**

திரு. கிருஷ்ண மூர்த்தி என்பவரின் மாட்டுக்கு வயிறு பொருமி 3 நாட்களாக இரை தின்னாமல் இருந்தது. அதற்கு பேரையூர் அரசு கால்நடை மருத்துவர் டாக்டர் நவநீதகிருஷ்ணன் அவர்கள் கூறியபடி புதுமஞ்சள் 100 கிகி , பச்சரிசி 250 கிகி , வாழைப்பழம் 5 சேர்த்து அரைத்து 3 வேளை கொடுத்தோம். மறுநாள் காலையில் பால் 3 லிட்டர் இருந்ததாக சொன்னார்கள்.

**இளங்கொடி விழாமலிருந்தால்**

சாப்டூர் 3 வது வார்டைச் சேர்ந்த எனது நண்பர் சுந்தர மூர்த்தியின் மாடு முதல் நாள் இரவு கன்று போட்டு மறுநாள் மதியம் வரை இளங்கொடி போட வில்லை என்று சொன்னார். அதற்கு நான் ஆலமர சருகினை சிறிதளவு எடுத்து தீயில் கருக்கி கரியை தண்ணீரில் கலக்கி கொடுக்கும் படி சொன்னேன். அதுபோல் அவர் கொடுத்து 5 மணி நேரம் கழித்து இளங்கொடி போட்டதாக சொன்னார்.

**அசைபோடாமல் , வயிறு பொருமலாக இருந்தால்**

எனது சகோதரியின் மாட்டுக்கு வயிறு பொருமலாக அசைபோடாமல் இருந்தது. அதற்கு சிறிதளவு உப்பினை எடுத்து வாயில் போட்டேன். மாடு உடனே அசை போட்டது. பின்பு 10 முற்றிய வெற்றிலை அதனுடன் பெருங்காயம் சேர்த்து அரைத்து தண்ணீரில் கலக்கி காலை , மாலை இரண்டு வேளை கொடுத்தேன். அன்று இரவு மாடு கழிந்து மறுநாள் மதியத்திற்கு மேல் நன்றாக உணவு எடுத்தது.

ஜி. சுந்தரமூர்த்தி
த/பெ. கும்பலிங்கம்
8 வது வார்டு , சாப்டூர் அஞ்சல்
பேரையூர் தாலுகா
மதுரை மாவட்டம் – 625 705

## வருடம் முழுவதும் காய்க்கும் கத்தரிச்செடி

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு தாலுகாவிலுள்ள கள்ளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் காந்தி கிராம கிராமிய பல்கலைக் கழகத்தில் விவசாய துறையில் 2 வருட டிப்ளமோ படித்து தேறி உள்ளார். இவர் ஒரே தாவர குடும்பத்தைச் சேர்ந்த (சோலனேசியே) கத்தரிச் செடியையும், சுண்டைக்காய் செடியையும் ஒட்க் கட்டி புதிய பயிர் இரகம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

**குருத்து ஒட்டு முறை**

இவரது தோட்டத்தில் பயிரிட்ட கத்தரிக் காய் செடியை தாய் தாவரமாகயும், சுண்டைக்காய் செடியை வேர்ச் செடியாகவும் குருத்து ஒட்டு முறையின் மூலம் ஒட்டுக் கட்டினார். வளர்ச்சி விகிதம் 90 சதவீதம் வெற்றியடைந்தது. ஒட்டுக் கட்டிய செடிகள் ஓரளவே பராமரிக்கப்பட்டாலும் மிகவும் செழித்து வளர்ந்தன. ஒரு செடிக்கு 2 முதல் 2.1/2 கிலோ வரை மகசூல் கிடைத்தது.



**பயிரின் சிறப்பம்சங்கள்**

வறட்சியை தாங்கும் தன்மையில் சிறந்து விளங்குகின்றன. பூச்சி நோய் தாக்குதல் மிக மிக குறைவாகவே காணப்படுகிறது. குறைந்தது 2 ஆண்டுகள் வரை மகசூல் கிடைக்கும். இப்புதிய இரகத்திற்கு "வருடம் முழுவதும் காய்க்கும் கத்தரி"என்று பெயரிட்டுள்ளார். இந்த இரகம் நீண்ட நாள் காய்ப்பதால் வீட்டுத் தோட்டத்திற்கும் விவசாயிகளுக்கும் நல்ல பலன் தரும் என்று கூறுகிறார்.

வி. இராமலிங்கம்
த/பெ. ஆர். வேலுச்சாமி
5/48 , வடக்குத் தெரு , கள்ளிப்பட்டி அஞ்சல்
தாடிக்கொம்பு வழி
திண்டுக்கல் மாவட்டம் – 624 709
தொலைபேசி : (0451) – 437950

## சூரங்குடி திரு. முருக செல்வனின் பனம் பாளை சீவும் கருவி

தூத்துக்குடி மாவட்டம் சூரங்குடியைச் சேர்ந்த திரு. ஆர் முருகசெல்வன் கணிதத் துறையில் பட்டம் பெற்றவர். கணிப்பொறித் துறையிலும் டிப்ளமோ பெற்றுள்ளார். 27 வயதாகும் இவர் பனம் பாளை சீவும் கருவியை வடிவமைத்துள்ளார்.

பனைத்தொழிலாளர்கள் பதனீர் எனப்படும் சாற்றை மரத்தில் இருந்து எடுத்து அதைக் காய்ச்சி கருப்புக்கட்டி செய்கின்றார்கள். பதனீரானது "பாளை" எனப்படும் பனை மரத்தின் கிளை போன்ற பகுதியிலிருந்து வடிகிறது. பாளையின் கீழ் மண்சட்டி ஒன்றை கட்டி பதனீரைச் சேகரிக்கிறார்கள். பாளையிலிருந்து எப்போதும் பதனீர் கிடைக்க வேண்டுமானால் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை பாளை சீவப்பட வேண்டும். இல்லையேல் பாளையின் நுனியில் படியும் பாகு போன்ற திரவம் அதை அடைத்துவிடும். இதனால் பதனீர் வருவதும் நின்றுவிடும். அதனால் பனைத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு மூன்று முறை மரத்தில் ஏறி பாளையைச் சீவுகிறார்கள். இதனால் பனைத் தொழிலாளர்களது உடலும் மனமும் மிகவும் சோர்ந்து விடுகிறது. மேலும் இளவயதிலேயே நோய்வாய்ப்படவும் ஏதுவாகிறது.

அவர்களது வேலைப்பளுவினைக் குறைக்கும் வண்ணம் பாளையை , தானாகவே தினமும் மூன்று முறை சீவி விடும் கருவி ஒன்றை வடிவமைக்கும் எண்ணத்துடன் இவர் ஒரு கருவியை வடிவமைத்துள்ளார். மேலும் இந்தக் கருவி ஒரு மூடப்பட்ட அமைப்பாக செயல்படுவதால் தேனீக்கள் பதனீரை உறிஞ்சி குடிப்பதும் தடுக்கப்படுகிறது.

**கருவியின் அமைப்பு**

இதில் ஒரு மோட்டாரின் முன்புறம் சுழலும் பகுதியானது பற்சக்கர அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. பற்சக்கரப் பகுதியானது ஒரு சுழலும் தண்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. சுழலும் தண்டின் நுனியில் ஒரு கத்தி இணைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பானது ஒரு டைமர் சர்க்யூட்டுடன் தொடர்பு படுத்தப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**இயங்கும் விதம்**

கருவியானது எப்போதும் மின் இணைப்புடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. டைமர் சர்க்யூட் எந்த நேரமும் இயங்கிய நிலையிலேயே இருக்கும். டைமர் சர்க்யூட்டின் உதவியால் தினமும் மூன்று முறை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மோட்டார் ஒரே ஒரு சுழற்சிக்கு மட்டும் இயக்கி வைக்கப்படுகிறது. இதனால் மோட்டாருடன் இணைக்கப்பட்டுள்ள கத்தியானது பாளையின் நுனியில் உள்ள படலத்தை சீவுகிறது. இதனால் பதனீர் வெளியேறுவது அதிகமாகிறது.

இந்தக் கருவியானது மூடப்பட்ட ஒரு பிளாஸ்டிக் பெட்டியில் வைக்கப்பட்டு பெட்டியிலிருந்து ப்ளாஸ்டிக்



குழாய் மூலமாக பதனீர் மரத்தின் அடியில் உள்ள மற்றொரு பெட்டியில் சேகரிக்கப்படுகிறது. கீழே உள்ள பெட்டியை பூட்டி விடுவதன் மூலம் ''தபால் பெட்டி'' போல தேவையான போது பதனீரைத் தொழிலாளி எடுத்து கொள்ள முடியும்.

இத்தகைய கருவி ஒன்று செய்வதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 100/– பராமரிப்பு செலவு என்று ஏதுமில்லை. மின்சாரமும் விவசாயிகளுக்கு இலவசமாதலால் பனை ஏறும் தொழிலாளிக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்பில்லை.

இந்தக் கருவியை வேண்டுவோருக்கு தானே வடிவமைத்து தருவதாகவும் பிறர் வடிவமைக்க தொழில் நுட்ப ஆலோசனை தருவதற்கும் தயாராக இருப்பதாக இவர் கூறுகிறார்.

முகவரி
ஆர். முருகசெல்வன்
1/80 , சூரங்குடி அஞ்சல்
விளாத்திகுளம் தாலுகா
தூத்துக்குடி மாவட்டம் – 628 901
தொகுப்பு : இல. விஜயகாமாட்சி , சேவா

## மாநில அளவிலான அடிமட்ட கண்டுபிடிப்பாளர் கருத்தரங்கு

சேவா நிறுவனமும் , அகமதாபாத் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய மாநில அளவிலான அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களுக்கான கருத்தரங்கம் மதுரை அரசரடியிலுள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரி வளாகத்தில் ஆகஸ்டு 3 ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதில் 8 பெண்கள் உட்பட 61 அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் , 19 தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் , உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கருத்தரங்கிற்கு கனரா வங்கி லீடு பேங்க் மேலாளர் திரு. வணங்காமுடி தலைமை வகித்தார். மதுரை , தமிழ்நாடு காந்தி நினைவு நிதி தலைவர் திரு. க.மு. நடராஜன் கருத்தரங்கைத் துவக்கி வைத்து துவக்க உரையாற்றினார். தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் போது தலைவரான பேராசிரியர் அனில் கே குப்தா தனது சிறப்புரையின் போது கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து அவற்றை சமுதாயத்திற் கேற்ற வகையில் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்று கூறினார். நபார்டு வங்கியின் மதுரை மையத்தின் பொது மேலாளர் திரு. நரசிம்மன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எஸ். ஜெயராஜ், மதுரை விவசாய கல்லூரி முதல்வர் திரு. ரெங்கசாமி திண்டுக்கல் முன்னோடி வங்கி மேலாளர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் அறிவுக் குழுமத்தை பலப்படுத்த யோசனை கூறினார்கள். அடிமட்ட கண்டுபிடிப்பாளர் சங்கத்தின் தலைவர் திரு. ஜெயசீலன் அவர்கள் நன்றியுரை கூறினார்.

கருத்தரங்கில் , கண்டுபிடிப்பாளர்கள் 3 குழுக்களாகப் பிரித்து கீழ்க்கண்ட தலைப்புகளில் விவாதம் நடத்தினர்

அ) அடிமட்ட கண்டுபிடிப்புகளுக்கான நிதியுதவி விதிமுறைகளை வகுத்தல்

ஆ) அடிமட்ட கண்டுபிடிப்புகளுக்கான சங்கத்தை வலுப்படுத்தல்

இ) தற்போதைய பிரச்சினைகளை தேர்ந்தெடுத்து கண்டுபிடிப்பாளர்கள் மூலம் தீர்வு காணுதல்

ரின் நிறுவனத்தின் திரு. பால்பாசில் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதுடன் அதற்கான காப்புரிமை பெற்று வர்த்தக ரீதியில் செயல்பட்டு இலாபம் ஈட்டுவது குறித்தும் விரிவாக கூறினார். தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகர் டாக்டர் கா. காளிமுத்து கண்டுபிடிப்பாளர்களுக்கு பரிசுகளை வழங்கி அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களுக்கு அரசு ஆதரவு பெற்று தருவதுடன் அங்கீகாரம் வழங்கவும் ஏற்பாடு செய்வதாக கூறினார்.

### மண் வளம் கூட்ட நுண்ணுயிர்களை பெருக்கும் கரைசல்

இரண்டு லிட்டர் தொல் உயிர் பாக்டிரியா (தயாரிக்கும் விபரம் நம் வழி வேளாண்மை பருவம் 9 இதழ் 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது) பெருகிய கரைசலை 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு டிரம்மில் 10 லிட்டர் சாணிப்பால் ,40 லிட்டர் நீர் சேர்த்து ஊற போட வேண்டும். ஒரு வாளியில் 8 லிட்டர் நீர் எடுத்து அதனுடன் 25 கிராம் ஈஸ்ட் , 25 கிராம் வெல்லம், 50 மி.லி ஆமணக்கு எண்ணெய் சேர்த்து 3மணி நேரம் புளிக்க விட்டு டிரம்மில் உள்ள கலவையுடன் கலந்து விட வேண்டும். இரண்டு லிட்டர் நீரில் 25 கிராம் பொர்ரஸ் சல்பேட்டை கரைத்து அதனையும் டிரம்மில் சேர்க்க வேண்டும். இதனை 5 முதல் 7 நாட்கள் கழித்து உரமாக பயன்படுத்தலாம்.

கரைசல் தயாரிக்கும் சமயம் சாணத்திற்கு பதில் 100 லிட்டர் சாண எரிவாயு கரைசலை பயன்படுத்தலாம். அதற்கு முன் அதனை ஒரு வாரம் புளிக்க வைக்க வேண்டும். இந்த சமயம் தொல் உயிர் பாக்டிரியா நன்றாக பெருகிவிடும். கரைசலை கொதிக்க வைத்து ஆற வைத்து பின் அவை அனைத்தும் இறந்து விடும். இந்த கரைசலை கால் கிலோ கருப்பட்டி சேர்த்து சூடுபடுத்தி அதனுடன் 1 கிலோ நுண்ணுயிர் கலவையை (பாஸ்போ பாக்டிரியம், அசோட்டோ பேக்டர் , சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ் , டிரைக்கோ டெர்மா விரிடி போன்ற ஒவ்வொன்றையும் தனித்தனி பாத்திரத்தில் ) சேர்த்து ஊற வைப்பதால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகுகின்றது. ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கும் இரு மடங்காக பெருகும் இவற்றை தனியாக ஒரு டிரம்மில் சாணிக் கரைசல் எடுத்து அதில் அரை லிட்டர் பஞ்ச கவ்யா 2 லிட்டர் நுண்ணுயிர் கலவை சேர்த்து மேலும் புளிக்க விட்டு நீர் பாயும் வாய்க்காலில் ஒரு பாருக்கு ஒரு லிட்டர் வீதம் மாதத்துக்கு ஒரு முறை / இரண்டு பாசனத்துக்கு ஒரு முறை அளிக்க வேண்டும்.

முகவரி
திரு. சுந்தரராமன்
கோம்பு பள்ளம் தோட்டம் , கோட்டு
வீரம்பாளையம் , சத்தியமங்கலம் – 638 401
தொலைபேசி : 04295 – 20063

## ஸ்ரீவில்லிபுத்தூர் பொன்னுச்சாமியின் மின்னழுத்த ஏற்றத்தாழ்வை சரிசெய்யும் ரிலே சுவிட்ச்

ஸ்ரீவில்லிபுத்தூரில் மோட்டார் ரீவைண்டிங் ஓர்க்ஷாப் நடத்திவரும் திரு. பொன்னுச்சாமிக்கு 56 வயதாகிறது. இவர் ஒன்றாம் வகுப்பு வரையே படித்துள்ளார். பரம்பரையாக பனை மரம் ஏறி கூலி வேலை செய்யும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் . குடும்பச் சூழ்நிலையாலும் வறுமையினாலும் படிக்க வசதியின்றி மாடு மேய்த்து பிழைக்கும் நிலையில் இருந்தார். ஒய்வு நேரத்தில் வருமானத்துக்காக தென்னை ஓலை தயாரித்து விற்று வந்தார்.

**பரிசோதனையின் ஆரம்ப காலம்**

இவரது 12 ம் வயதில் சைக்கிள் கடையில் டயர் பழுது பார்த்தல் மற்றும் வல்களைசிங் வேலைகள் செய்து வந்தார். அங்கு வேலை செய்த போது இரு நபர்களின் உதவியுடன் காற்றடைக்கும் ''டன்லப் கிளிப்'' எனப்படும் சைக்கிள் பம்பை தனி ஒருவரே அனைத்து வாகன டயர்களுக்கும் உபயோகித்துக் கொள்ளும் படியாக வடிவமைத்தார். இது அனைவராலும் பாராட்டப்பட்டது.

ஒரு முறை இவரது வாடிக்கையாளர் ஒருவர் ரிலே சுவிட்ச் செயல்படும் முறை குறித்து விளக்கம் கேட்டார். ஓர்க்ஷாப்பில் இருந்த அதன் உரிமையாளர்கள் ,''மின்சார வெப்பத்தினால் எண்ணெய் ஆவியாகி மோட்டாரை நிறுத்துகிறது'' என்று கூறினார். ஆனால் பொன்னுசாமிக்கு அந்த விளக்கம் சரியானதாக தோன்றவில்லை. எனவே டிரான்ஸ்பார்மர் எவ்வாறு வேலை செய்கிறது, மின்சாரத்தை காந்தம் எவ்வாறு நிறுத்துகிறது என்பது பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார். இயற்பியலில் கூறப்படும் ஓம்விதி டிரான்ஸ்பார்மரில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை தனது பரிசோதனை மூலம் தெரிந்து கொண்டார். ரிலே சுவிட்சுகளில் காந்தவியல் மின்னோட்டம் பற்றியும் அறிந்தார்.

பல விவசாயிகள் பம்ப் செட் மோட்டார் பழுது பார்க்க அடிக்கடி இவரை சந்தித்தனர். இதற்கான காரணத்தை இவர் சிந்தித்த போது ஓர் உபாயம் தோன்றியது. மின்னழுத்தம் (வோல்ட்டேஜ்) மோட்டார் காயிலால் தாங்கிக் கொள்ள முடியாத அளவு அதிகரிக்கும் போது காயில் எரிந்து பம்ப்செட் பழுதாகி விடுகின்றது. அதிக மின்னழுத்தத்தை தாங்குமளவு

திறன் உள்ளதாக காயில் அமையும்படி மோட்டார் வடிவமைக்கப்பட வேண்டும் என்று புரிந்து கொண்டார்.

ரிலே சுவிட்ச்

5 குதிரை சக்தி கொண்ட மோட்டார் ஒன்று 71/2 ஆம்பியர் மற்றும் 440 வோல்ட்டில் இயங்கிக் கொண்டிருக்கும். போது 6 ஆம்பியர் 350 வோல்ட்டுக்கு மின்னழுத்தம் இறங்கும் நிலை ஏற்பட்டால் மோட்டாரின் வெப்பம் பெருமளவு அதிகரித்து காயில் எரிந்து விடும். இந்த சூழ்நிலையில் இவர் கண்டுபிடிப்பு ரிலே சுவிட்சு பொருத்தப்பட்டிருந்தால் மின்சாரம் உடனடியாகத் துண்டிக்கப்பட்டு காயில் சேதமடைவதையும் தடுத்துவிடலாம்.

சில சமயங்களில் கிணற்றில் நீர் மட்டம் மிகவும் குறைந்து விட்ட நிலையிலும் மோட்டார் தொடர்ந்து இயங்கி பழுதாகும் வாய்ப்பு உள்ளது. ரிலே சுவிட்சைப் பயன்படுத்தி கிணற்றில் தண்ணீர் இல்லாத போது அல்லது நீர் மட்டம் குறையும் போது மின்சாரம் துண்டிக்கப்பட்டு மோட்டார் தானாகவே நின்றுவிடும். இதனால் மோட்டார் இயங்கிக் கொண்டிருக்கும் போது அருகிலேயே நின்று நீர்மட்டத்தை கண்காணிக்க வேண்டிய அவசியமில்லை.

**சிறப்பம்சங்கள்**

எரிபொருள் தேவையில்லை.

மின்காந்த தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது.

மும்முனை ஸ்டார்ட்டருக்கு (3 ஃபேஸ்) ஓவர் லோடு காயில் ஒன்று போதுமானது.

மும்முனையில் ஏதேனும் ஒரு முனையில் மின்சாரம் தடைபட்டாலும் அல்லது தேவைக்கு அதிகமான / குறைவான அளவு மின்னழுத்தம் விநியோகிக்கப்பட்டாலும் மோட்டார் உடனடியாக நின்றுவிடும்.

திருகாணியை கடிகாரம் முள் சுற்றும் திசையில் சுற்றி வரும்போது எந்த இடத்தில் வரும் போது மோட்டார் நிறுத்தப்படுகிறதோ அந்த இடத்தில் திருகாணியை சுழற்றாமல் நிறுத்தி விட வேண்டும். இதனால் குறைந்த மின்னோட்டத்தில் மோட்டாரை இயங்கச் செய்யாதிருக்கலாம்.

டிஓஎல் ஸ்டார்ட்டருக்கு 3 ரிலே சுவிட்சுகளும் 1 ஓவர் லோடு காயிலும் போதுமானது.

முகவரி

திரு.டி. பொன்னுசாமி

6 எ/ 3 கண்ணன் மோட்டார்

ரீவைண்டிங் ஒர்க்ஸ்

ஆத்துக்கடை ராஜாஜி தெரு ,

ஸ்ரீவில்லிபுத்தூர்

விருதுநகர் மாவட்டம்

தொகுப்பு: சின்னப்பன் , சேவா

## அழிந்து வரும் "தோடா" ரக எருமை பாதுகாக்கும் கூட்டம்

தேசிய பல்லுயிர் பன்மயக் கருத்தரங்கு கூட்டமைப்பு 7.9.2001 அன்று ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா தாளவாடியில் உள்ள "டிரெட்" தொண்டு நிறுவனத்திலும் 10.9.2001 அன்று நீலகிரி மாவட்டம் ஊட்டி தாலுகா "சாண்டிநல்லா" என்னும் இடத்திலுள்ள செம்மறி ஆடுகள் இனவிருத்தி ஆராய்ச்சி மையத்திலும் நடைபெற்றது.

தோடா இன எருமைகள் மிக பழமையான வகைகள் . இவை தோடா ஆதிவாசிகளிடம் மட்டுமே இருந்து வருகின்றன. தோடா இன எருமைகள் ஆதிவாசிகளின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தை நிர்ணயிக்கும் ஒரு சிறப்பு அம்சமாகும். ஆதிவாசிகளின் வாழ்வு ஆதாரத்தையே இந்த தோடா எருமைகள் நிர்ணயித்து வருகின்றன. ஆதிவாசிகளின் வீட்டில் நடைபெறும் திருமணம், குழந்தை பிறப்பு , கோயில் திருவிழாக்கள் மற்றும் இது போன்ற நிகழ்ச்சிகளில் முக்கிய அம்சமாக தோடா எருமைகள் பயன்படுத்தி வழிபடுவதும், சீதனமாக கொடுப்பது போன்ற வழக்கம் இருந்து வருகின்றது. இந்த வகையான பாரம்பரிய மிக்க தோடா எருமைகள் தற்போது அழிந்து வருவது அதிகமாகிக் கொண்டு வருகின்றது. இதற்கு காரணம் மேய்ச்சல் நிலத் தட்டுப்பாடு போதிய அளவு மருத்துவ வசதி இல்லாமை , வனவிலங்குளான புலி , சிறுத்தை, செந்நாய் போன்றவை முக்கியமான பிரச்சினைகளாகும்.

இக்கருத்தரங்கில் மதுரை சேவா தொண்டு நிறுவன இயக்குநர் திரு. விவேகானந்தன் , கோயம்புத்தூர் வனவியல் கல்லூரி முதல்வர் , டாக்டர் அண்ணாமலை ஐ.எப்.எஸ் , தாளவாடி டிரெட் நிறுவன செயலர் திரு. வியானி, சாந்திநல்லா , செம்மறி ஆடுகள் இனவிருத்தி ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் . ஐயூ. உதவி பேராசிரியர்கள் டாக்டர். தனராஜ் மற்றும் டாக்டர் அனில் குமார் , சோலூர்

பேரூராட்சித் தலைவர் திரு. சத்தியராஜ் மற்றும் சேவா தொண்டு நிறுவன அலுவலர்கள் திரு. முத்தையா, திரு. பரமசிவன் , செல்வி . விஜயகாமாட்சி மற்றும் தோடா ஆதிவாசி இன மக்கள் அனைவரும் கலந்து கொண்டு தோடா எருமை பராமரிப்பில் ஏற்படும் பிரச்சினையை தீர்க்க பல்வேறு வகையான வழி முறைகள் பற்றி விளக்கம் தந்து தீர்மானங்கள் நிறைவேற்றி அவற்றைத் தகுந்த அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு செல்லது என முடிவு செய்யப்பட்டது.

**தோடா எருமைகளின் குணாதிசயங்கள்**

இந்த தோடா எருமைகள் கருப்பு நிறமுடையதாக இருக்கும். கொம்புகள் தலைப் பகுதியைச்சுற்றிலும் பெரிய அரைவட்ட வடிவமாக காணப்படும். கழுத்துப் பகுதியில் மூன்று வெள்ளை நிற கோடுகள் காணப்படும். வால்பகுதி நீளமாக காணப்படும். பார்ப்பதற்கு காட்டு எருமைகள் போல் காட்சியளிக்கும். பால் ஒரு நேரத்திற்கு 2 லிட்டர் வரை தரும். பாரம்பரிய மேய்ச்சல் காடுகளில் இவை மேய்ந்து வரும் . இவை நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டவை .

**தாளவாடி பகுதிக்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

1. பாரம்பரிய மாடுகளை மலையில் மேய்க்கும் போது மலையில் சிறுத்தை , யானை , நரி போன்றவற்றால் தாக்கப்படும் ஆடு, மாடுகளுக்கு நிவாரண உதவி அளிக்க கர்நாடக அரசு என்ன விதிமுறை பின்பற்றுகிறதோ அதே விதிமுறைபடி தமிழ்நாடு அரசும் நிவாரணம் அளிக்க கேட்டுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

2. மலையில் மேயும் விலங்குகளுக்கு சப்பை நோய் , கோமாரி , தொண்டை அடைப்பான் நோய் வருவதால் சம்பந்தப்பட்ட மாவட்ட கால்நடை துறை இணை இயக்குநர் துணை இயக்குநர் மூலம் கால்நடை மருத்துவ அதிகாரிகளை குறிப்பிட்ட தினத்தில் வருகைதந்து மருத்துவ வசதி செய்து கொடுக்க கேட்டுக் கொள்வது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

வனத்துறை மூலம் ஒரு சில கிராமத்தில் வனக்குழு அமைத்து அவர்களே நேரிடையாக மரத்தை நட்டு வருகின்றார்கள். இனிமேல் வனக்குழு உறுப்பினர்களிடம் அவர்கள் கூறும் இடம் , பாதை மற்றும் ஆரம்ப கால நிகழ்ச்சிகளை கலந்து முடிவு எடுத்தால் மாடுகள் மேய்வதற்கு நல்ல தீர்வு கிடைக்க வழி உண்டு என மாவட்ட வன அலுவலர்கள் கேட்டு கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

**ஊட்டி பகுதிக்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

1. மேய்ச்சல் நிலங்களில் வனத்துறையானது யூகலிப்டஸ் , பைனஸ் போன்ற மரங்களை நட்டு மேய்ச்சல் நிலப்பரப்பை இழக்கும் நிலையில் உள்ளோம். எனவே இதனை (மரம் நடுவதை) உடனடியாகத் தடுக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. மலைப்பகுதியிலுள்ள மேய்ச்சல் நிலங்களில் பரவி வரும் கோத்தகிரி மலர் என்ற களைச் செடிகளால் நிலப் பரப்பு குறைந்து வருவதால் அவற்றை வேரோடு அழித்து மேலும் வளராமல் நிலத்தைப் பாதுகாக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை மற்றும் ராலீஸ் இந்தியா நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மந்துகளுக்கு அருகிலுள்ள நீர் நிலைகளில் கலந்து விடுவதால் அதை அருந்தும் கால் நடைகள் உயிரிழப்பு ஏற்படுகின்றது. அந்தக் கழிவு நீர் நீர்நிலைகளில் கலக்கா வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது முடியாத பட்சத்தில் அந்த நீர் நிலைகளுக்கு வேலி அமைத்து அதனைத் தோடா எருமைகள் குடிக்க விடாமல் தடுக்க வேண்டும். என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. நீர்க் காசி மந்து இடத்தில் பால் சேகரிப்பு மையம் ஒன்றை ஏற்படுத்தவும் பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்க ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள மனுவை ஏற்றுக் கொண்டு நீலகிரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய நிர்வாக இயக்குநர் அனுமதி அளிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5. சாந்திநல்லா பகுதியில் மேய்ச்சல் பகுதியான நீர்க்காசி மற்றும் பகல்கோடு மந்தில் தகுந்த கம்பி வேலி ஏற்பாடு செய்து சுற்றுலாப் பயணிகள் மற்றும் திரைப்படக் குழுவினர் படம் பிடிக்க வரும் சமயம் மேய்ச்சல் பகுதிக்கு இடையூறு நேராமல் இருக்க கம்பி வேலி போட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

6. பாரம்பரிய தோடா எருமைகளுக்கு குடற்புழு நீக்கம் போன்ற முக்கிய மருத்துவ சிகிச்சை வசதிகளை முன்பு போல் செய்து தர திட்ட அலுவலர் (HADP) அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

7. நீலகிரி மலைப்பகுதியிலுள்ள தோடா எருமை மற்றும் தோடா இன மக்களையும் காட்டு விலங்குகளிடமிருந்து (புலி , சிறுத்தை) பாதுகாத்து மனித உயிர் இழப்பையும் விலங்கு சேதாரத்தையும் தடுப்பதற்கு இந்த வன விலங்குளைப் பிடித்து முதுமலை சரணாலயத்துக்கு அனுப்ப ஏக மனதாக முடிவு செய்யப்பட்டு நமது பிரதமருக்கு மனு அளிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

8. கால்நடைகளுக்கு போதுமான குடிநீர் வசதி கிடைக்க நீர்வள ஆதாரங்களான தடுப்பணை, கசிவு நீர்க் குட்டை போன்றவற்றை மக்கள் தேர்ந்தெடுக்கும் இடங்களில் கட்டுமானம் செய்ய மாவட்ட , வன அதிகாரியை அணுகுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

9. கோயில் மந்து, ஒச மந்து , தூடக்கூர் மந்து, ஏப்கோடு மந்து, நெடு கோடு மந்து , நரிக்குழி மந்து , தவிட்டுக்கோடு மந்து ஆகிய 7 இடங்களுக்கும் பாதை வசதி செய்து தர நீலகிரி மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

10. தோடா இன மாடு வளர்ப்போர் சங்கம் அமைக்க எதிர்வரும் அக்டோபர் மாதம் 10 ஆம் தேதி புதன் கிழமையன்று நீர்க்காசி மந்து என்ற இடத்தில் மீண்டும் கூடிப் பேசுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொகுப்பு : இல. விஜயகாமாட்சி , சேவா

## நிகழ்ச்சி நிரல்

**3.10.2001**

**இடம் :** கால்நடை மூலிகை வைத்திய அனுபவ பகிர்வு

**இடம் :** தவத்திருச்சோலை , வேப்பம் பட்டி அஞ்சல் , சாப்டூர் வழி , பேரையூர் தாலுகா , மதுரை மாவட்டம் – 625 705.

**முகவரி**

சேவா
45 , டி.பி.எம் நகர்
விராட்டிபத்து
மதுரை – 625016

**6.10.2001**

**இடம் :** சுற்றுச்சூழல் மன்ற கூட்டம்,

**இடம்:** தாணிப்பாறை , மகாலிங்கமலை
வத்திராயிருப்பு , விருதுநகர் மாவட்டம்

**முகவரி**

திரு.இரா. கணேசன்
சேவா களப் பணி அலுவலகம்
98/83 , மன்னர் திருமலை தெரு
வ. புதுப்பட்டி
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம் – 626 116

**7.10.2001**

இயற்கை வேளாண்மை மற்றும் கால்நடை மூலிகை வைத்தியம்

**இடம் :** இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி
நச்சாந்துபட்டி , திருமயம் தாலுகா

**முகவரி**

திரு.எஸ்.பி. பாலு
ஜோதிபண்ணை , பானாவயல்
நச்சாந்து பட்டி
திருமயம் தாலுகா
புதுக்கோட்டை மாவட்டம் – 622 404

**10.10.2001**

தோடா எருமை வளர்ப்போர்
சங்க கூட்டம்

**இடம் :** நீர்க் காசி மந்து
சாண்டிநல்லா
ஊட்டி – 643 237

**முகவரி**

திரு. கே. நீதிராஜ்
நீர்க்காசி மந்து
சாந்திநல்லா
ஊட்டி – 643 237

**13. 10.2001**

சுற்றுச்சூழல் மன்ற கூட்டம்

**இடம் :** அய்யனார் கோவில்
ராஜபாளையம்
விருதுநகர் மாவட்டம்

**முகவரி**

திரு. இரா . கணேசன்
சேவா களப் பணி அலுவலகம்
98/83 , மன்னர் திருமலை தெரு
வ. புதுப்பட்டி – 626 116
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா

**8.10.2001 – 16.10.2001**

உயிர்சக்தி வேளாண்மை

**இடம் :** புனித இருதய கல்லூரி

செண்பகனூர்
கொடைக்கானல்
முகவரி
Biodynamic Assciation of
India #78, 1st Floor , 11th cross
Indiranagar 1st Stage
Bangalore - 560 038
Phone / Fax -: 080 - 5272185